தென்மொழி

ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!

ஊழி பெருகி உலகம் புரண்டாலும்
　　உளந்திருந்த மாட்டீர்கள், ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!
வாழிநும் உள்ளம்! வாழி இனவுணர்வு!
　　வாயார வாழ்த்துகின்றேன்; ஆனாலும் ஒன்றுரைப்பேன்!
"ஆழி உலகமெலாம் ஆண்டிருந்த செந்தமிழர்
　　ஆற்றல் குறைந்தார்; அணுவாய்ச் சிதைந்துவிட்டார்;
பூழி மணலில் புதையுண்டார்"-என்றே, நீர்
　　பொய்க்கனவு கண்டிருந்தீர்; பொங்கிவிட்டார்! திந்திமிதிம்!

ஒன்றன்று; மூவா யிரமாண்டாய் எம்வரலாற்
　　றுண்மை மறைத்திருந்தீர், ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!
கொன்றன்றே, ஆழக் குழிவெட்டி மூடிவிட்டீர்.
　　குலங்கோடி செய்தீர்; மதப்புரட்டு கோடிசெய்தீர்!
'நன்றன்று நன்றி மறப்ப'தென்று கற்றிருப்பீர்.
　　நடந்த திருட்காலம்; நண்ணிற்று போரொளியும்!
இன்றன்று; நாளையன்று; என்றேனும் எந்தமிழர்
　　இழந்தபுகழ் மீண்டுமிங்கே ஏற்றுவர்காண்! திந்திமிதிம்!

ஊற்றுப் பெருக்காய் உணர்வெடுத்துப் பாய்ந்ததுகாண்!
　　உளந்திருந்திக் கொள்ளுங்கள், ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!
கூற்றுக் கொதிப்புப்போல் கொப்பறையின் நெய்க்கொதிபோல்
　　கொம்பூதிச் சங்கூதிக் கொண்டு கிளம்பிவிட்டார்!
ஆற்றல் பெரிதுகாண்; எள்ளற்க ஆரியமே!
　　அனைத்துலகும் இணைந்தெழுமுன் அகந்தை அகற்றுவிரே!
மாற்றம் பெறுங்கள்;இலை மாற்றப் படுவீர்கள்!
　　மாந்தரொடு மாந்தரென வாழ்ந்திருங்கள்; திந்திமிதிம்!

கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடு : 8 ஓலை : 5

www.thamizham.net - Free E book No 7425

நமக்கு வந்த மடல்கள்.

0 207: இத்திங்களுக்கு வந்த தென்மொழி கண்டோம்; இராசாசியின் திசைமாற்றங்கண்டோம். தென்மொழியின் போக்கிலும் திருப்பம் கண்டதுபோல் மகிழ்ச்சிகொண்டு நண்பர்கள் பேசியதையும் மகிழ்ச்சியுடன் கண்டோம்.

—இரா. இராசாராம் சுடலைமுத்து, பாளையங்கோட்டை.

0 208: தென்மொழியின் சுவடி: 8, ஓலை: 4. படித்தேன். தங்கள் ஆசிரியவுரை மிகவும் சிறக்க அமைந்திருந்தது. ஆசிரியவுரையில் இன்றைய அரசியலில் பார்ப்பனர்களின் விளையாடல்களைத் தெளிவுற எடுத்துரைத்துத் தமிழின மக்களுக்குப் புதிய தெம்பூட்டியுள்ளீர்கள். தமிழக விடுதலைக்கு வித்தூன்றிக் கொள்கைவழி நிற்கும் தங்களுக்கு இன்றைய இளைஞர் உலகம் நல்ல ஒத்துழைப்பினை அளிக்கும். ஆனால் இளைஞர்களைக் கவரும் கவர்ச்சியோ அல்லது கவரும் எண்ணமோ தங்கட்கு இல்லையென எண்ணவேண்டியுள்ளது.

—கோ. அரங்கநாதன்—பெருஞ்சேரி, மாயூரம்.

0 209: இனிய ஐயா, தென்மொழியின் ஆசிரியவுரை தெளிந்த அரசியற்கருத்துகளின் அடிப்படையில் அமைந்திருப்பினும் "தென்மொழி"யைப் புதிதாகக் கண்ணுறும் அன்பர்தம் விருப்பு வெறுப்புகட்கேற்ப 'நம்மை முனிவதும், பாராட்டுவதும் நகைப்பைத் தருகின்றது. அவற்றை ஒரு சிக்கலைப்போன்று கருதித் 'தென்மொழி'யைக் குற்றஞ்சாட்டுவதும் சிலர் அறிவுரை கூறுவதும் தென்மொழியின் விலைமதிப்பற்ற பக்கங்களே வீணாக்கப்படுவதும் வருத்தத்தைத் தருகின்றது. இதைப்போன்ற மடல்கள் தொடர்ந்து தென்மொழியோடு நடைபோடும் அன்பர்க்கு நகைப்பையே தருகின்றன.

—சி. தமிழ்வென்றி, நெல்லை.

0 210: பேரன்புமிகு பெருந்தமிழ்ப் பாவலர் அவர்களே, வணக்கம். விடைத் தென்மொழி இதழ்கண்டேன். ஆசிரியவுரை மிக நன்று பெரியார் பற்றிய நூருசிரியம் வாழ்த்துப்பா மிக இனிமை. விளக்கவுரை ஒளிர்விட்டு விளங்குகிறது. நிற்க. தமிழ்நாடு என்ற சொல் தமிழ் இலக்கியம் எதிலும் இல்லை என்று கூறிய காமராசரை ஏன் வற்புறுத்தி எழுதவேண்டும்? அவர் நம் இனத்தை எண்ணிப் பாராதவர். நானை தமிழ் இனம் என்ருேர் இனம் இல்லை என்று கூறிடக் கூசாதவர். தென்மொழி அன்பன், —வேலரங்கன், கோவை-2.

0 211: பேராண்மை சான்ற புலவ, நற்றமிழ் நலிவு நீக்கி வலிவு தேக்கும் நாவலரே, தங்கள் பணிக்குத் துணைநிற்கும் அணியில் யானும் ஒருவனுவன். தங்களின் வீறுசான்ற உரையினைக் கோவை, பறம்புக்குடி நகரங்களிலே நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தேயும், மாநாட்டிலும் நேரில் கேட்டு மகிழ்ந்தேன். தங்கள் வழியே என்றும் தொடர்வேன்; எவருக்கும் அஞ்சேன்; தடையினை உடைத்து உவப்புடன் உழைப்பேன். என் கடன் தமிழ்ப்பணி ஆற்றுவதேயாம்.

—த. வையாபுரி, ஆனைமலை.

0 212: பெருமதிப்பிற்குரிய அய்யா, வணக்கம், நான் கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து 'தென்மொழி'யைப் படித்து வருபவன்

(தொடர்ச்சி [illegible] அட்டை பக்கம்)

www.thamizham.net - Free E book No 7425

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி:8 ஓலை: 5-6.

(கடகம்-மடங்கல், தி. பி. ௨௦௦௧- சூலை-ஆக-செப்.-1970)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1,

பிராமணீயத்திற்கு இறுதி எச்சரிக்கை!

பிராமணீயம் இந்த நாட்டைக் கெடுத்ததுபோல் வேறு எந்த ஆற்றலும் எந்த நாட்டையும் கெடுத்துவிட வில்லை. ஒவ்வொரு தனி மாந்தனும் இந்த நாட்டில் பிராமணீயத்தால் சிதைக்கப்பட்டிருக்கின்றான். அதன் கொடுமைப்பிடியில் சிக்கிய ஒவ்வொருவனும் தன்மானத்தை இழந்திருக்கின்றான்; அறிவை விலைபோக்கியிருக்கின்றான்; தன் வாழ்க்கையை ஒருநாயைப்போலும் பன்றியைப்போலும் நடத்தியிருக்கின்றான். ஏறத்தாழ ஈராயிரத்தைந்நூறாண்டுகளாய்த் தமிழன் அதில் சிக்குண்டு தன்னையே இழந்திருக்கின்றான். அரசியல் துறையிலும் சரி, குமுகாயத் துறையிலும்சரி, பொருளியல் துறையிலும் சரி, தமிழகத்தில், ஏன் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்கும் எந்த

www.thamizham.net - Free E book No 7425

வீழ்ச்சிக்கும் பிராமணியமே முழுக் கரணியமாக இருந்திருக்கின்றது. அதன் நச்சுப் பல்லால் கடியுண்டு சிதைந்து போகாத துறையேஇல்லை. பெண்ணை, ஆணை, குழந்தைகளை எல்லாரையும் கடித்துக் குதறி, அவர் களின் சதைகளையும் நார் நரம்புகளையும் அணு அணுவாய்ச் சிதைத் திருக்கின்றது பிராமணியம்.

வெள்ளைக்காரன் இந்திய மண்ணை விட்டுப்போய் இருபத்துமூன் றாண்டுகள் ஆகியும், இம்மண்ணில் சரிவர அரசியல் மலர்ச்சியோ, பொருளியல் வளர்ச்சியோ எள்ளத்துணையும் ஏற்பட வில்லை யென்ப தற்கும் பிராமணியமே கரணியம். அது விதைத்த நச்சு விதைகளே இந்நிலத்தில் வேறு எந்த விளைவும் ஏற்படா வண்ணம் கெடுத்து வந் திருக்கின்றது. மக்களிடையில் ஒற்றுமை ஏற்பட வழியில்லையென்றால் அதற்குப் பிராமணியம் விதைத்த இன ஏற்றத்தாழ்வுகளைத்தவிர வேறு எந்தக் கரணியத்தையாவது எவராவது காட்ட முடியுமா? மக்க ளிடையே கல்வி பரவவில்லை யென்றால், அதற்குப் பிராமணியம் ஊன் றிய மூடத்தனங்களை விட வேறு ஏதுக்களை எந்த அறிஞனாலும் எடுத்துக்கூற முடியுமா? மக்களிடையே ஏற்பட்டிருக்கும் பொருளியல் ஏற்றத் தாழ்வுகளுக்குப் பிராமணியத்தை விட வேறு தடையிருக்க முடியுமா?

எல்லா மக்கள் நிலையினின்றும் தன்னைத் தனிப்படுத்திக்கொண்டு, வேறு பிரித்துக்கொண்டு, காப்பமைத்துக் கொண்டு பிராமணியம் முன்னேறியதை-பிற இன முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை இட்டதை வரலாற்றடிப்படைகளைக் கொண்டு எந்த அறிஞனாலும் இல்லை என்று மெய்ப்பிக்க முடியுமா? வானத்தினின்று பொழிகின்ற மழைக்கும், மண்ணிலிருந்து விளைகின்ற பயிர்க்கும் 'வருணபகவானும்' 'பூமா தேவியுமே' கரணிய கருத்தாக்கள் என்று பிராமணியம் இட்டுக்கட்டிப் பேசியிருக்கவில்லையானால் இந்நாட்டில் அறிவியல் வளர்ந்திருக்குமா, வளர்ந்திருக்காதா? அவர்களால் கண்டு காட்டப்பெற்ற 'சரசுவதி தேவி' இங்கிருந்த மக்களின் நாவிலும் நெஞ்சிலும் வந்து நின்றாலொழி யக் கல்வியருள் கிடைப்பது அரிது என்னுமொரு கருத்தை இந்தப் பிரா மணர்கள் பரப்பியிருக்கவில்லையானால், இந்த நாட்டில் எத்துணையளவு கல்வி முன்னேறியிருக்கும்! பணம் பெருத்தவனாகவும் பஞ்சையாகவும் ஒருவன் வாழ்வதற்கு அவனவன் முற்பிறவியிலே செய்த வினைகளே கரணியமென்றும், அதற்கு 'இலட்சுமி'யின் (இந்தச் சரசுவதி, இலட் சுமி போன்ற கற்பனைக் கடவுள்களைக் 'கலைமகள்' என்றும் 'திருமகள்' என்றும் தூய்தமிழ்ப் பெயர்களாகக் குறிப்பிட எனக்கு மனம் வர வில்லை.) கடைக்கண் அருள் வேண்டும் என்று இந்த ஆரியப் பார்ப்

www.thamizham.net - Free E book No 7425

பனர் பிதற்றியிருக்க வில்லையானால், இந்த நாட்டில் பொதுவுடைமை பூத்திருக்குமா பூத்திருக்காதா? இப்படிப்பட்ட பிராமணீயப் பூசல்களை இன்னமும் இந்த நாட்டில் வைத்துக்கொண்டு, அவற்றை ஆண்டு தோறும் தவறாமல் நினைவூட்டிக் கொண்டு, மேனாடுகளைப்போல் இந்த நாட்டில் கல்வி வளரவில்லை, செல்வம் செழிக்கவில்லை; பொதுவுடைமை பூக்கவில்லை என்று கூறித்திரியும் மடயர்களை, மடயர்கள் என்று சொல்வதால் என்ன பிழையேற்பட்டு விட்டது என்று எவனாவது கூற முடியுமா?

பிறந்து கொப்பூழ்க்கொடி அறுபடும் நேரத்திலிருந்து, இறந்து மண்ணைப்போட்டு மூடும்வரை, இங்குள்ள ஒருவனின் அல்லது ஒருத்தியின் மேல் பிராமணீயம் எவ்வளவு ஆட்சி செலுத்தி வருகின்றது என்பதை, இந்த நாட்டின் நடைப்போக்கை அன்றாடம் தன் விருப்பம்போல் மாற்றி மகிழும் இந்திரா காந்தி முதல், சென்னைத் தியாகராயநகர் சாய்க்கடையில் கிடந்து நெளியும் புழுவரை, எவராகிலும் மறுத்துரைக்க முடியுமா? எத்தனை யெத்தனைச் சடங்கு சாங்கியங்கள்? எத்தனை யெத்தனைக் கழிப்பு, கருமாந்திரங்கள்? எத்தனை யெத்தனைப் பூசனை, புனைவுகள்? எத்தனையெத்தனை விழா, வேடிக்கைகள்? கடவுள்கள் என்ற பெயரால் எத்தனையெத்தனைக் கொண்டைத்தலைகளும், மொட்டைத் தலைகளும் பம்பைத் தலைகளும், காவி உடைகளும், கமண்டலங்களும்? இவற்றுக்கெல்லாம் என்ன விளக்கம், என்ன விளைவு, என்று இந் நாட்டின் உச்சியில் போய் அமர்ந்துகொண்டு, ஒருபுறம் பூரிசங்கராச்சாரிகள், காஞ்சி காமகோடிகள் முதலியோர்களின் கால்களைக் கழுவிக் குடித்துக் கொண்டே, ஒருபுறம் கால்சட்டை குப்பாயத்துடன் உருசியா முதலிய பொதுவுடைமை நாடுகளை வலம்வந்து கொண்டிருக்கும் கிரி முதலியோர் கூற முடியுமா? இவற்றால்தான் இந்தியா முன்னேற முடியும் என்று உறுதிகூற முடியுமா? இந்தியாவில் உள்ள கோயில் கோபுரங்களே, அவற்றுள் செருகியிருக்கும் வேல்கள், சூலங்களே இந்தியப் பட்டாளப் படைகளுக்குப் போதுமென்றால், அவர்கள் கைகளில் ஏன் வெடிகுண்டுகளும் வேட்டெஃகங்களும்? இவற்றிற் கெல்லாம் பிராமணீயப் பட்டாளப் படைத்தலைவர் இராசாசி விடைகூறுவாரா? இவையெல்லாம் என்ன மூடத்தனங்கள்? எத்தனைவகைப் புரட்டுகள்? இவற்றில் கொட்டிக் கிடக்கும் செல்வங்கள் எவ்வளவு? சொத்துகள் எவ்வளவு? இந்தக் கோயில் பெருச்சாளிகளுக்குண்டான விளைநிலங்கள் எவ்வளவு? இவையெல்லாம் ஏன் இந்தப் பொதுவுடைமைக்காரர்களின் கண்களிலும், 'நக்சல்பாரி'களின் கைகளிலும் படவில்லை?

இராமாயணப் பாரதக் கதைகளை எழுதியும், சொல்லியுமே இராசாசிகளும், வாரியார்களும் இந்த நாட்டில் பிழைத்துக்கொள்ள முடி

www.thamizham.net - Free E book No 7425

யும்! ஆனால் இந்த மண்ணில் உள்ள புழுவொடு புழுவாய் நெளிந்து
கிடக்கும் ஒரு விறகுவெட்டியும், செருப்புத் தைக்கும் ஏழையும் அப்படிப்
பிழைக்க முடியுமா? அவர்களும் அவர்கள் பெண்டு பிள்ளைகளும் என்
றென்றைக்கும் அந்தப் 'பெரிய'வர்களின் கால்களைப் பிடித்துத்தானே
பிழைக்க வேண்டி உள்ளனர்? அவர்கள் கண்ட கடவுள்களெல்
லாம் அந்த இரும்புக் கோடரிகளும், எருமைத்தோல்களுந்
தவிர வேறு எவை? அவர்கள் அப்படியே இருப்பதைத்தானே
இராசாசிகளும், வாரிகளும் பூரிகளும் விரும்புகின்றன? இல்லையென்
றால் அவர்களை வாழ்விக்க அல்லது குமுகாயத்தின் மேல்நிலைக்கு அவர்
களை உயர்த்த இவர்கள் வைத்திருக்கும் திட்டங்கள் எவை? இராமா
யணமும் மகாபாரதமுந்தாமா? அவற்றைப் படித்தாலும் படிக்கக் கேட்
டாலும் அவர்கள் முன்னேறி விடுவார்களா? இராசாசியும், காமகோடி
யும் கூறும் 'ஆன்மீக'மும், 'பக்தி'யும் அவர்களுக்கு எந்தவகையில்
கைகொடுத்துதவும்? அல்லது இதுவரை உதவின? இவற்றைப்பற்றி
யெல்லாம் ஏன் இவர்கள் தங்கள் 'கல்கி'களிலும் 'ஆனந்தவிகடன்'
களிலும், 'துக்ளக்'களிலும் எழுதித்தீர்க்க வில்லை? 'பார்ப்பான்' என்
றாலோ 'ஆரியன்' என்றாலோ கீழ்ப்பாய்ச்சிக்குமேல் ஒரு தார்ப்
பாய்ச்சை வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வரும் இவர்கள்,
இராமாயணமும் மகாபாரதமும் பகவத்கீதையுந்தாம் இந்த நாட்டை
முன்னுக்குக் கொண்டுவரும் என்றால் துணிந்து வெளிப்படையாக
'ஆம்' என்று அவர்கள் அச்சுப்பொறியில் அச்சுப்போட்டுக் காட்
டட்டும். இல்லையானால் 'இல்லை' என்று வெளிப்படையாக எழுதிக்காட்
டட்டும்.

"ஆயிரமாயிரமாண்டுகளாகவே தமிழன் அடிமையாகவே இருந்
தான்; இன்னும் இருப்பான்; அவன் அடிமடியும், நெஞ்சாங்குலையும்
என்றென்றைக்குமே நம்முடையவைதாம்; எனவே அவன் நெஞ்சில்
இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் விதைப்போம்; அவற்றின்
விளைவை அவன் அடிமடியிலிருந்து அறுப்போம்" என்று ஆரியப் பார்ப்
பனர்கள் இன்னும் நம்பிக்கொண்டிருப்பார்களானால், அவர்கள் இந்தத்
தலைமுறையைத் தங்கள் இறுதித் தலைமுறையாக எண்ணிக் கொள்ளட்
டும். இப்பொழுதுள்ள வீடணத் தமிழர்களையே தங்கள் இறுதி அடிமை
களாகக் கருதிக்கொள்ளட்டும். இல்லையெனில் இனிமேலாகிலும் தங்கள்
'இந்து'மதக் குப்பை, கூளங்களான 'வேத' 'புராண'ங்களையும் 'இரா
மாயண, மகாபாரதங்'களையும் எடுத்துக்கொண்டுபோய் இலெனின்
கிராடிலோ, கென்னடி முனையிலோ குவித்துக் கொளுத்தட்டும். அந்தச்
சாம்பலை 'வால்கா'விலும் பசிபிக்கிலும் கரைத்து விடட்டும். ஏனென்
றால் இந்தச் சாம்பல் எருக்கூட—தமிழக மண்ணின், அல்லது இந்திய
மண்ணின் விளைச்சலைக்கெடுத்து விடும்.

www.thamizham.net - Free E book No 7425

இங்குள்ள ஆரியப் பார்ப்பனர்களை எவரும் வெறுக்கவில்லை. அப்படி இங்குள்ளவர்களில் எவரும் முழுக்க முழுக்க, நூற்றுக்கு நூறு ஆரியர்களும் இல்லை. அவர்கள் நாடிநரம்புகளில் ஓடிக்கொண்டிருப்பது முழுக்க முழுக்க ஆரியஅரத்தமும் இல்லை. அவற்றில் பண்டைத் தமிழர்களின் அரத்தமும் கலந்து ஓடுகின்றது. எனவே நாங்கள் வெறுப்பது, குறைகூறுவது, திருந்திக்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டுவது ஆரியத்தை, ஆரியப்பார்ப் பனீயத்தை–இன்னும் தெளிவாகவும் சரியாகவும் சொல்வதானால் பிராமணீயத்தை! ஆமாம், படைப்புக் கருத்தா(!)வான பிரமனின் முகத்தில் உள்ள கருவாயினின்று புறப்பட்டார்களாமே, அந்த உயிரினங்களின் கொள்கை—கோட்பாடுகளை, அப்படியாக அவர்கள் எழுதிவைத்துக் கொண்டு ஏமாற்றிவரும் 'வேத' 'புராண' 'இதிகாச' விளக்கங்களை! அவற்றால்தான் பண்டைத் தமிழன் இடுப்பொடிக்கப் பட்டான்; அவற்றால்தான் அவன் மனைவி, மக்கள் பிறங்கடைகள் ஆகிய யாவரும் என்றென்றும் மீளா அடிமைகளாக விலைபேசப்பட்டனர். அவற்றில்தான் தமிழர்களின் அடிமைப் பட்டயம் தீட்டிவைக்கப் பெற்றுள்ளது.

அந்த 'அவை' இருக்கும்வரை தமிழர்கள் 'பிராமணர்கள்' எனப் படுவோரைத் தங்களின் புலத்தை வேரறுக்க வந்தவர்களாகத்தான் கருதிக்கொள்ள முடியும். தங்களின் வாழ்க்கைப் பகைவர்களாகத் தான் எண்ணிக்கொள்ளமுடியும். தங்கள் முன்னோர்களைப்பழிவாங்கிய வர்களாகத்தான் நினைத்துக்கொள்ளமுடியும். தங்கள்பின்னோர்களையும் பழிவாங்கக் காத்திருக்கும் கழுகுகளாகத்தான் பேசிக்கொள்ளமுடியும். இவ்வியல்பான போக்கிலிருந்து மாறுபடும் தமிழ் உடம்புகளைத் தமிழ் மறவனுக்கோ தமிழ் மறத்திக்கோ பிறந்தவையாகக் கருத முடியாது. ஒருவேளை அவ்வுடம்புகளின் தந்தையோ, அதைப் பெற்ற பாட்டனோ அல்லது அதையும் பெற்ற பூட்டனோ ஆரியனாக அல்லது ஆரியப் பார்ப் பானாக இருந்திருக்கலாம் என்று கருதிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இவற்றையெல்லாம் எழுதுகையில் இவற்றைப் படிக்கப்போகும் 'அவர்'களின் உள்ளக் கொதிப்பு என்ன என்பதை நான் உணர்வேன். இங்குக் கொட்டப்பெற்ற சொற்கள் எவரெவர் உள்ளங்களைப் புண் படுத்தும், எவரெவர் உயிர்களைக் கொத்தித் தின்னும் என்பதும் எனக்குத்தெரியும். அவை இப்பொழுதுள்ள இவ்விந்தியச் சட்ட அமைப்பு களுக்கு எவ்வெவ் வகையில் மாறுபட்டன என்பதையும் நான் அறி வேன். அவற்றால் என்னென்ன அகப்புற விளைவுகள் நேரும் என்பதை யும் நன்கு உணர்வேன். இச் சொற்களைத் தூக்கிக்கொண்டு எத்தனை வீடணத்தமிழர்கள் ஆரியப் பார்ப்பன நெஞ்ச அரிப்புகளுக்கேற்பச்

www.thamizham.net - Free E book No 7425

சொரிந்து கொடுப்பார்கள் என்பதையும் ஒருவாறு உய்த்துணர்வேன். ஆனால் அவையாவும் அவற்றின் பிராமணீயம் என்னையும் என் முன்னோர்களையும் படுத்திய பாடுகளைவிட மிகமிகக் குறைந்தவையே. இக்கால் நானும் என் தமிழர்களும் படும் பாட்டைவிட மிகவும் சிறியவையே! எனவே அவற்றிற்கெல்லாம் நான் விடைகூற வேண்டும்; அல்லது தண்டனை ஏற்க வேண்டும் என்று நான் அழைக்கப்படும் பொழுதுதான், என்னையும் என் தாய்நிலத்தையும் இந்தப் பிராமணீயம் படுத்திவரும் பாடுகளுக்கெல்லாம் விடிவு ஏற்படும் என்று கருதுகின்றேன். எனவே சொற்களை உணர்வு நெருப்பில் புரட்டி உங்கள் முன் வைக்கின்றேன். கனிவான சொல்லைப் பேசத்தெரியாதவனல்லன் நான்; கண்ணியமாக எழுதி மக்களைக் குளிப்பாட்ட உணராதவனல்லன் நான்; காற்றைப்போலும் நீரைப்போலும் சொற்களைப் பயன்படுத்த என்னால் முடியும். இருந்தாலும் நெஞ்சத்தை மறைத்துப் பேசும் இயல்பு எனக்குத் தெரியாது; சூதுகளையும் சூழ்ச்சிகளையும் இரண்டகங்களையும் சொற்களால் புனைந்துரைத்து நல்ல பெயர் தேடிக்கொள்ளுவோர் பார்ப்பனர்களாகவோ அல்லது அவர்களின் பாங்கர்களாகவோர்தாம் இருக்க முடியும். என்னைப்போல் ஆரியத்தால் நெருக்குண்ட, நசுக்குண்ட ஏழைகளின் கூட்டத்தைச்சேர்ந்தவனாக இருக்க முடியாது.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வோரடி மண்ணிலும் ஆரியநச்சு தூவப் பெற்றிருக்கின்றது. ஒவ்வொரு மனத்திலும் ஆரிய நினைவுகள் அலைமோதுகின்றன. தமிழ் கற்றவனாயினும் சரி, அறிவியல் ஆய்ந்தவனாயினும் சரி, மருத்துவ மண்டையாயினும் சரி, வானூர்தி வலவனானாலும் கப்பல் மீகாமனானாலும், படைத்தலைவனானாலும் சரி, எல்லாருடைய நடை, உடை, தொழில், அறிவு, மனைவாழ்வு யாவற்றிலும் ஆரியநச்சு நன்கு பாய்ச்சப்பட்டுக் கிடக்கின்றது. பாவேந்தர் பாரதிதாசன் பாடியது போன்று '**நான்கு பக்கமும் வேடர் சுற்றிட நடுவில் சிக்கிய மான்போல்**' தமிழனின் அகம், புறம், உயிர், உடல் யாவும் ஆரிய வலையால் பின்னப்பட்டுக் கிடக்கின்றன.

ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நொடியும் பிராமணீயம் அவனை வாட்டி வதைக்கின்றது. பண்டையில் அன்று; இன்றுங்கூட அவனை 'அது' நாள்தொறும் கொட்டி வருகின்றது. அச்சு வடிவில் தாளிகைகளாக 'அது' விற்கப்படுகின்றது. செய்தி வடிவில் 'அது' விளம்பரப் படுத்தப் படுகின்றது; வானொலி உயிர்ப்பில் 'அது' வீச்சப் படுகின்றது; பள்ளிப் பொத்தகங்களில், கோயில் குளங்களில் பிராமணீயம் தன் நச்சுக் கைகளைப் பரப்பியிருக்கின்றது. 'இராகு' காலம் பார்க்காமல் தமிழன் காலெடுத்து வைப்பதில்லை; முழுத்தம் பாராமல் அவன் மனைவி

www.thamizham.net - Free E book No 7425

யொடு கூடுவதில்லை; பிள்ளையார் சுழியிடாமல் அவன் எழுதத்தொடங்குவதில்லை; 'நீறு' 'நாமம்' என்ற பெயரால் அவன் நெற்றிகளிலும், 'கொட்டை' 'மணி' என்ற பெயரால் அவன் கழுத்துகளிலும், பிராமணீயம் நெளிந்து புரள்கின்றது. எல்லாம் வல்ல இறைப்பேராற்றல் ஒன்றுண்டு என்ற தூய அறிவியல் உண்மை, 'சிவ'மாகவும் 'மாலி'யமாகவும் ஆரியப் பூச்சுகளால் பல்லாயிரங்கோடி வடிவங்கள் கொண்டு மக்களை மருட்டி வருகின்றது. பொய் மெய்யாகவும், மெய் பொய்யாகவும் திரிக்கப்பெற்று விலைபேசப் பெறுகின்றன. **'கல்விக்குக் கலைமகள்' 'செல்வத்திற்குத் திருமகள்'** –என்று கற்ற தமிழ்ப் புலவர்களும் தூய தமிழ் என்ற பெயரால் ஆரியத்தைப் பறை சாற்றுகின்றனர். அரசினர் சார்பில் வந்திறங்கும் அமெரிக்க, உருசிய, செருமானிய, சப்பானியப் பொறிகளும் இங்குள்ள ஆரியப் பார்ப்பான் ஒருவன் பூசனைகள் செய்த பின்னர்தாம் இயக்கப் பெறுகின்றன. 'வானியல்' ஆய்வு ஒரு புறம்; மழைபெய்ய ஆரிய வேள்விகள் ஒருபுறம். சாணியும் சோறும் பிசைந்துண்ணப் பெறுதல் போன்றதொரு நிலையை இவ்விந்திய நாட்டைத்தவிர வேறெங்கும் காணமுடியாது. நிலவில் அடிவைத்த காலத்திலேயே மாம்பலத்தில் தான்தோன்றிப் பிள்ளையாரின் கல்படிமம் ஒன்று நிலத்தினின்று வெடித்து வந்ததென்ற புரட்டு நடந்திருக்கிறதென்றால், 'வேத' காலத்தில் என்னென்ன நடந்திருக்கும் என்று சற்றே எண்ணிப் பார்த்தால் விளங்காமல் போகாது.

இவற்றிற்கெல்லாம் முடிவு என்ன? இவை இப்படியேதான் போய்க் கொண்டிருக்குமா? இப்படிப்பட்ட பிராமணீயத்திற்குத் தமிழன் அடிமைப்பட்டு ஏமாறத்தான் வேண்டுமா? அவனும் அவன் பிள்ளைகளும் என்றென்றும் அடிமைகளாக இத் தமிழ் மண்ணில் பிறந்து பிறந்து சாகத்தான் வேண்டுமா? இவற்றிற்கெல்லாம் 'ஆம்' என்று ஆரியம் விடையிறுக்குமானால், நாம் அவர்களுக்குக் கூற--அல்லது எச்சரிக்க விரும்புவது–"இல்லை; இவற்றிற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளியிட்டாக வேண்டும்; அதுவும் இந்தத் தலைமுறையிலேயே வேண்டும்" என்பது தான். அதன்படி, அவர்களின் பூணூல் முதலியவை கழற்றப்பட வேண்டும். கோயில் கருவறைகளினின்று பிராமணீயம்' வெளியேற்றப்பட வேண்டும், தமிழ் மொழியினின்று 'அது' தூக்கியெறியப்பட வேண்டும். அரசின் காவலிலிருந்து அது விலக்கப்பட வேண்டும். 'வேத, 'புராண' 'இதிகாச' 'மநு' முதலிய நூல்கள் எரிக்கப்பட வேண்டும். அவற்றைப் படிப்பது 'குற்றம்' என்று சட்டமியற்ற வேண்டும். இவை அத்தனையும் இந்தத் தலைமுறையிலேயே செய்யப் பெற்றாக வேண்டும். இல்லையெனில் அடுத்த தலைமுறையில் தமிழ் இருக்காது; தமிழனும் இருக்க மாட்டான். எனவே இதனைப் பிராமணீயத்திற்கு விட்ட எச்சரிக்கையாகமட்டும் கொள்ளாமல் தமிழர்க்கு விட்ட எச்சரிக்கையாகவும் கொள்ளுக.



www.thamizham.net - Free E book No 7425

Who is Periyar?

—T. Muthukumaran, B. A.,

(This is but a translation of Noorasiriyam of 'Pavalar' Dorai Manickam. As the beauty of the original is lost in translation, I do it with due apologies to the great Tamil poet.-Translator.)

Though not a king of yore with flourish of drum
Yet more powerful than those who reign full trim
By word of mouth. Nor a minister true
To counsel the ruler and rul'd, to screw
That they may not go astray. Yet pow'rful
A tongue has he. As soft as sponge and full
White as cotton lies his beard on lion's breast
That thinks of ways, right and proper. In trust
He tours all villages, cities and towns,
In sun and rain and braves all ups and downs,
Unmindful of all blame. Relentless hold
Has he on policy. He seeks them bold
Morn or eve, noon or midnight all, each day.
In words, simple, unadorned so to say
Yet pointed, as is the tiger's leap, he speaks
To root out all the Ariyan ills, and seeks
The glory of the Tamils to mention
Caring not for fame, name or position.
Spoke harsh of customs and manners and bared
Their ignorance, threw light on life and dared
Assert living present alone perfect
Shunning caste and religious defect,
Believes no theism. leading to confusion
In all place, all to have all, is fusion—
Saying a new how communism will thrive
So rare does he, as all elders do strive
'Periyar' * is he call'd-so great is he.

(* Periyar in Tamil means he who is great.)

நூருசிரியம். பாடல் எண்: உ௪.

கன்னி தி. பி. 2001 'அறிவு' இதழிலிருந்து எடுக்கப்பெற்றது-நன்றி.

www.thamizham.net - Free E book No 7425

வேறென்ன சொல்வது?

0 நாட்டின் தேசியக்கொடி, அரசியல் சட்டம், தேசியப்பாடல் மற்றும் தேசியப்பொருள்களை மதிப்புக்குறைவு செய்வதைத் தடுக்க வகை செய்யும் ஒருசட்டவரைவை (மசோதாவை) உள்துறைத்துணையமைச்சர் கே. பந்த் தில்லி மேல் அவையில் கொணர்ந்தார்!

—செய்தி.

இதைவிடத் தேசியத்திற்கு மிகவும் மதிப்புக் குறைவான செயல் வேறில்லை.

0 அரசுப் பாடப்புத்தகங்கள் தரங்குறைந்தும், பிழைகள் மலிந்தும், பக்கங்கள் மாறியும் உள்ளன என்று சென்னை மேலவையில் பேச்சு.

—செய்தி.

“குறிப்பிட்ட பாடப்பொத்தகத்தில் உள்ள பிழைகளை எடுத்தெழுது’- என்பதும் அரசினர் தேர்வில் ஒரு கேள்வியாக இருக்குமோ என்னவோ?”

0 இனி நேருவின் கருத்துகளை நினைவுகூர்ந்து செயல்படுவோம்.

—கிரி

“இதுவரை காந்தியின் கருத்துகளை நினைவுகூர்ந்து அலுத்துப் போனோம்.”

0 90 விழுக்காடு மக்கள் ஏழைகளாக உள்ள இந்தியாவில் குமுகாயப் பொருளியல் துறைகளில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்த வேண்டியது தவிர்க்கவியலாது. இதைத்தான் அமைதியான குடியரசு முறையில் செய்ய எங்கள் கட்சி முயன்று வருகிறது.

—சகசீவன்ராம்.

“எப்பொழுது செய்யத் தொடங்கும் என்பது மட்டும் எங்களுக்குத் தெரியாது; எங்கள் இந்திராவுக்குத்தான் தெரியும்.”

0 நாட்டில் குழப்பம் விளைவிக்கும் வன்முறைகளையும் கொடுமைச் செயல்களையும் ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது.

—தலைமையமைச்சர் இந்திரா.

“நான் செய்வதைத்தான் மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்.”

0 பேராயக்கட்சியின் கொடியை உருவாக்கியவரின் மனைவி விசயவாடாவில் உள்ள ஒரு கோயிலில் ஏதிலி (அனாதை) போல இருக்கிறார்.

—செய்தி.

பேராயக்கட்சியின் நிலையை விட அவர் நிலை உண்மையில் வருந்தத்தக்கதாக இருக்க முடியாது!

www.thamizham.net - Free E book No 7425

0 மக்கள் பெருக்கத்தைக் கண்டு ஏன் அஞ்சவேண்டும்? ஒருவர் புதிதாகப் பிறந்தால் வேலை செய்வதற்கு மேற்கொண்டு இரண்டு கைகள் கிடைக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது! —கிரி.

இக்காலத்தில் ஒரு வயிற்றுக்கு இரண்டு கைகள் போதா என்பதைக் கிரி மறந்துவிட்டாரா?

0 தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுத்த முறை செல்லாது. —தில்லி மீயுயர் அறமன்றத் தீர்ப்பு.

போகட்டும்; இந்தத் தீர்ப்பாவது செல்லுபடியாகுமா?

0 ஆர் எசு. எசு. ஊழியர்கள் எந்தக் கட்சியிலும் சேரலாம். —கட்சிப் பொதுச்செயலாளர் அறிக்கை.

அஃதாவது எந்தக்கட்சியும் உருப்படியாகக் கூடாதென்பதற்குத்தான் எங்கள் கட்சி!

0 'வாழ வகையற்றவர்கள்' என்று ஒதுக்கப்பட்ட 3000 இந்தியர்கள் பர்மாவிலிருந்து சென்னைக்கு வருவார்கள். —செய்தி.

இங்கிருப்பவர் எல்லாரையும் வாழ வகையுள்ளவர்கள் என்று கருதிக்கொண்டார்கள் போலும்!

0 ஆந்திர அரசுப் பேருந்துகளில் கள்ளச்சீட்டுகளை விற்பனை செய்து வருகிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. —செய்தி.

ஆந்திராவில் என்ன? எல்லா இடங்களிலும்தான் நடைபெறுகிறது! சில இடங்களில் கண்டுபிடிக்கப்படவில்லை; சிலவற்றில் கண்டும் பிடிபடாமல் இருக்கலாம்.

0 பட்டாளத் துறையில் இந்தித் திணிப்பு 36 ஆயிரம் கலைச் சொற்கள் புகுத்தப்பட்டன. —செய்தி.

இனி நம் போர்ப்படைகள் சீனர்களிடம் அஞ்சவேண்டுவதில்லை.

0 சான்சிபார் தீவில் உள்ள எந்தக் குடிமகனும் தனது சொந்த வகுப்பையும் சொந்த இனத்தையும் சேர்ந்த பெண்ணையோ ஆணையோ திருமணம் செய்து கொள்ளக் கூடாதென்று அந்நாட்டில் தடை விதிக்கப்பெற்றுள்ளது. —செய்தி.

'கலப்புமணப் பரிசு' செய்யாததைச் சட்டம் செய்யும் என்று கண்டுகொண்டிருப்பார்கள்.

www.thamizham.net - Free E book No 7425

0 பார்வையிழந்த பெண்ணுக்குக் கன்றுக்குட்டியின் வெள்ளை விழி யொன்றைப் பொருத்தி இந்தியாவிலேயே மருத்துவப் புரட்சியை ஏற்படுத்தினர் வேலூர் மருத்துவமனை மருத்துவர்கள்.
—செய்தி.

சிவக்குறியில் தன் கண்களைப் பெயர்த்து அப்பிய 'கண்ணப்பர்' கள் கவனிக்க.

0 இராசத்தான் மாநிலத்தில் உள்ள தூங்கார்ப்பூர், பன்சுவாரா மற்றும் சில பழங்குடிகள் வாழும் பகுதிகளில் இன்னமும்கூட அடிமைமுறை உள்ளது.—செய்தி.

உரிமை பெற்ற குடிமக்கள் இந்தியாவில் உள்ளனரா, என்ன?

0 சென்னை நகரத்தின் பெயரைக் குறிப்பிடுகையில், இனி அரசினர் குறிப்பேடுகளில், தமிழில் 'சென்னை' என்றும் ஆங்கிலத்தில் 'Madras' என்றுமே குறிப்பிட வேண்டும்.
—தமிழக அரசின் கட்டளை.

பாதிக்கிணறு தாண்டிய கதை!

பெரியார்க்குப் பாவாணர் விடுத்த வேண்டுகோள் அறிக்கையில் ஒரு மாற்றம்.

தென்மொழிச் சுவடி 7, ஓலை 10, 11-இல் தமிழ்த் தந்தை ஈ. வே. இரா. பெரியார் அவர்களுக்கு மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் விடுத்த வெளிப்படை வேண்டுகோளில் கீழ்க் காணும் மாற்றம் செய்யப் பெற்றுள்ளது.

1. இத்திட்டத்தின் அடிப்படையில் தொடங்கும் கல்வி நிறுவனம், பெரியார் தன்மானப் பகுத்தறிவுப் பல்கலைக் கழகம் என்று பெயர் தாங்கும்.

2. பெரியார் விருப்பத்திற்கேற்பப், பயிற்றுமொழி முற்றும் ஆங்கிலமாகவே இருக்கும்.

3. கற்பிக்கப்பெறும் துறைகள்: ஆங்கிலம், இசை, நாடகம், ஏரணம், அறிவியல் இவற்றுடன் பெரியாரியல் (PERIYARISM) என்ற பகுத்தறிவுக் கொள்கையும் கற்பிக்கப்பெறும்.

ஞா. தேவநேயன்.

www.thamizham.net - Free E book No 7425

தென்மொழிக்கு நன்கொடை.

1-8-69 முதல் 5-8-69 முடிய, தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

1.	திரு. சி. பாலகிருட்டிணன், நெய்வேலி-1.	5—00
2.	திரு. கா. பால்ராசு, நெய்வேலி—1.	5—00
3.	திரு. இரா. அப்பாவு, நெய்வேலி—1.	10—00
4.	திரு. இரா. அத்தியப்பன், நெய்வேலி-1.	5—00
5.	திரு. ச. இரத்தினசாமி, நெய்வேலி-3	1—00
6.	திரு. இராசா சந்திரசேகர், நெய்வேலி-3	2—00
7.	திரு. கிட்டுச்சாமி, நெய்வேலி-3	5—00
8	திரு. தீனதயாளன் நெய்வேலி	5—00
9.	திரு. குழந்தைநயினூர், நெய்வேலி	2—00
10.	திரு. பெலிக்சு, நெய்வேலி	1—00
11.	திரு. இரா. அருட்குவை, உரஆலை நெய்வேலி.	2—00
12,	திரு, பொன்-பகலவன், ஷை	2—00
13.	திரு. என். கலியமூர்த்தி, ஷை	1—00
14.	திரு. மு. அழகப்பன், ஷை	2—00
15.	திரு. இ. அண்ணாமலை, ஷை	1—00
16.	திரு நாராயணசாமி, ஷை	1—00
17.	திரு. சு. நீலகண்டன். நெய்வேலி.	1—00
18.	திரு. மேதலைவன், நெய்வேலி.	5—00
19.	திரு இராமலிங்கம், நெய்வேலி.	1—00
20.	திரு இ. சுப்பிரமணியன், நெய்வேலி.	1—00
21.	திரு. இராசரத்தினம், நெய்வேலி	1—00
22.	திரு. வ. வெ. சுவாமிநான். நெய்வேலி.	1—00
23.	திரு. மீரா. முகைதீன், நெய்வேலி.	2—00
24.	திரு. பாலகுரு. நெய்வேலி.	3—00
25.	திரு. வேணுகோபால், நெய்வேலி,	2—00
26.	திரு. செகதீசன், நெய்வேலி.	1—00
27.	திரு. தா. திருஞானசம்பந்தன், நெய்வேலி.	5—00
28.	திரு. பி. நம்பிராசன், நெய்வேலி.	2—00
29	திரு. பிரகாசம், நெய்வேலி.	1—00
30.	திரு. ச. சண்முகன், பேட்டைவாய்த்தலை]	8—30
31.	திரு. கன்னியப்பன், சென்னை.	10—00
32.	திரு, சே. போ. சுடர், கோவிலூர்.	5—00

—அமைச்சர், தென்மொழி

www.thamizham.net - Free E book No 7425

பாட்டு: உரு.

கைம்பாற் கள்ளி யிவரினு மொய்ம்பிலை
மைங்கால் நொச்சி மணப்பினும் அரத்துவாய்
வெவ்விலை வேம்பின் சினையணைந் தவிழினும்
மௌவல் நாற்றம் வெவ்வே ருதே!
எவ்விடம் பெயர்வோ ராயினு மவ்விடஞ்
செவ்வி மாறுவ ரல்லர்
ஒவ்வி யுளம்புகுந் தெனைமணந் தோரே!

பொழிப்பு:

கைப்புடைய பால் ஊறுங் கள்ளிச் செடியின்மிசை ஏறிப் 'படர்ந்தாலும், அடர்ந்து நெருங்கிய இலைகளையும் கருமை பொருந்திய கால்களையும் உடைய நொச்சிச் செடியினைப் பற்றித் தழுவினாலும், அரத்தின் வாயைப் போன்றதும், வெப்பம் பொருந்தியதுமான இலைகளையுடையவேப்பமரத்தின் மலர்முகைகளைஅளாவி மலர்ந்தாலும், முல்லையின் நறுமணம் அவ்வவ் விடத்திற்குத் தக்கவாறு மாறுபட்டுக் கமழாது; வினையினிமித்தம்ள த்தன்மை வாய்ந்த இடங்கட்குப் பெயர்ந்து செல்வோராயினும், அவ்விடங்களால், தமக்கியல்பான பண்பினின்று மாறுபடுவோரல்லர், புறத்தே விரும்பி உடன்பட்டுஎன் உள்ளத்துட் புகுந்து நின்று என்னை மணந்து கொண்ட அவரே!

விரிப்பு:

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தலைவனின் அறிவும், பண்பும் அறிந்து, அவன் வினைப்பாடு கரணியமாகப் புறத்தே பலவிடங்களுக்கும் பெயருந் தன்மையோன் எனினும், அவ்விடங்களின் சூழ்புகளாற் கவரப்பட்டுத் தன் ஒழுக்கத்தில் மாறுபடுவோன் அல்லன் என்று அவன் பண்பாட்டைப் போற்றித் தோழியிடம் தலைவி உரைப்பதாக அமைந்ததிப் பாட்டு.

கற்புக் காலத்து மேற்கொண்ட இல்லற வொழுக்கத்திடையில் பொருள் வருவாய் கருதி, வினைமேற்கொண்டு பிரிந்த தலைவன், வரவு

www.thamizham.net - Free E book No 7425

நீட்டித்துக் காலங்கடத்தியது கண்ட தோழி, ஒருகால் சென்றவிடத்துப் பலதேயத்து மகளிரையும் காண வாய்ப்புழி ஒழுக்கங் குன்றுவனோ, குன்றி அவர்வயப்பட்டு நிற்க, வரவு நீடியதோ என ஐயுற்றுளாக, அவள் ஐயுறவு நீக்கி, அவன் அறிவாற்றலறிந்து, அவன் பண்பைப் போற்றியுரைத்ததிக் கூற்று.

“வெண்மைத் தன்மையும் மணமும் கொண்ட முல்லை மலர்களை உடைய கொடி, கைப்புச்சுவை நிரம்பிய பால் ஊறுகின்றதும், கொழுவிய தோற்றமுடையதுமான கள்ளிச் செடியின் மீது இவர்ந்து படர்ந்தாலும், கருமைத்தன்மையும் நறுமணமும் கொண்ட இலைகளையும் கரிய கால்களையும் உடைய நொச்சிச் செடியினைத் தழுவி நின்றாலும், அரம்போலும் ஓரத்தரும்புடையதும் வெப்பு நிறைந்ததும் ஆகிய வேப்ப மரத்தின் மலர் முகைகளை அளாவி நின்றாலும், தன் வெண்மையினும் மணத்தினும் மாறுபடாது பூத்தல் தொழில் செய்வதுபோல், பழக்க வொழுக்கங்கள் மாறுபடும் பல தேயங்கட்குச் செல்லினும் என் தலைவன் தனக்குற்ற இயல்பான பண்பொழுக்கினின்று மாறுபடும் தன்மையோன் அல்லன்”—என்று அவன்பால் ஐயுற்ற தோழிக்கு அறிவுறுத்தினள் என்க.

ஈண்டு முல்லைக்கொடி அவன் செலவையும், மலர் அவன் உள்ளத்தையும் குறித்தன. கைம்பாற் கள்ளியும், மொய்ம்பிலை மைங்கால் நொச்சியும், அரத்துவாய் வெவ்விலை வேம்பும் பிற தேயங்களின் வேறுபாடுணர்த்த வந்தன. கள்ளியினது கசப்பு நிறைந்த பாலும், நொச்சியின் மணமும் கருமையும், வேம்பின் வெப்பும் ஆங்காங்கு வதியும் நிறையழி மகளிரது கவர்ச்சியையும் தன்மையையும் உணர்த்த வந்தன என்க.

கைம்பால் கள்ளி: கைப்பு நிறைந்த வெள்ளிய பாலையுடைய கள்ளி. ஆவின்பால் போன்ற தோற்றங்காட்டினும் கள்ளிப்பால் சுவைப்பின் கசப்பும் உண்ணின் உயிர்போக்குந் தன்மையும் உடையதுபோல், பார்த்தற்கு நிறையுடையவர் போல் தெரியினும் பொது மகளிர் பழக்கத்திற்கசப்பும், தன்மையில் உயிர்க்கு ஊறும் கொண்டவராவர் என்றாள் என்க. தன் தலைவன் பொருட்களின் தோற்றம் மட்டுமன்றி மெய்ப்பொருளும் தேர வல்லவன் என்று கூறினாள் என்க.

இவர்தல்: ஏறிப் படர்தல்.

ஈண்டு கள்ளி, பிரிவாகிய பாலைக்கு உரிப்பொருளாகி நின்றது.

www.thamizham.net - Free E book No 7425

'நிலத்துான்றிய முல்லை, அதனின்றெழுந்து ஏறி, நிலத்தைப் பிரிந்து, பாலைத்திணைக்குரியதாகிய கள்ளியின்மேல்படரினும்' என்று பொருள் கொள்க.

மொய்ம்பிலை மைங்கால் நொச்சி: மொய்த்தடர்ந்த இலைகளையுடையதும் கரியகால்களையுடையதுமான நொச்சிச் செடி.

நொச்சி மணமுடையதுபோல் தோன்றினும் நோயுடையார் நாடிப் போவதொன்றாகலின் அதன் தன்மையினையும் வரைவின் மகளிர்க்கு உவமை கூறினள். நிறையழி பெண்டிர் நிறைந்த நிலத்து, உறைவோனாயினும் உளத்தின் வெண்மையும் மணமும் விலக்கோனல்லன் என்பது தலைவியின் உறுதி.

மணப்பினும்: தழுவிப் படர்ந்தாலும்.

அரத்துவாய் வெவ்விலை வேம்பு: அரத்தின் பற்களைப்போன்ற ஓரங்களை உடைய வேம்பின் இலை.

வெள்-பு — வெப்பு-வேம்பு. வெப்பம் நிறைந்த தன்மையுடைய மரம்.

வரைவின் மகளிர் தம் பற்கள் கூரியவாயினும் அரத்தின் பற்களைப் போல் கொடுமையன. அவை தழுவத்தழுவத் தழுவப்பெற்ற பொருள் நிலைகுலைவதுபோல், அவரால் தழுவப் பெற்றாரும் நிலைகுலைந்து போவர் என்பது பொருள்.

சினையணைந் தவிழினும்: வேம்பின் பூஞ்சினைகளை அணைந்து அவற்றொடு தானும் ஒன்றாக முல்லை மலர்ந்தாலும்.

பூஞ்சினைகளொடு பொருந்தி நின்றது, தலைவன் புறப்பெண்டிரொடு நெருங்கிப் படரும் நொச்சியைக் குறித்தது. அவ்வாறு நெருங்கிப் படரினும் தன் தன்மையில் மாறுபடாத் தகையவன் அவன் என்றாள் என்க.

மௌவல்: முல்லை—காட்டு மல்லிகை.

வெவ்வேறாதே: வெவ்வேறு ஆகாது-ஆதே-இடைக்குறை.

எவ் இடம் பெயர்வோன் ஆயினும்: எத்தன்மை வாய்ந்த இடம் நோக்கிப் பெயரும் தன்மையோன் எனினும்.

அவ்விடம்: அவ்விடத்து.

www.thamizham.net - Free E book No 7425

செவ்வி: ஒழுங்கு-பண்பு-நேர்மை.

செம்-பகுதி. நேர்மையைக் குறிக்குமொரு சொற்பகுதி.

செப்பம்-செம்மை-செவ்வி.

மாறுவர் அல்லர்: மாறுபடுவோரல்லர். 'மாறார்' என்று குறியாது, 'மாறுவர் அல்லர், எனக்குறித்தது, அவ்வாறு மாறுபடுவோர் பலராகலின், அத்திறத்தோர் இவரல்லர் என்று உறுதிப்படுத்த வேண்டி என்க.

ஒவ்வி—புறத்தே ஒப்பி.

உளம் புகுந்து—உளத்தே புகுந்து. உளத்தில் நிறைந்து,

எனை மணந்தோர்: என்னைத் தழுவினோர்.-மணந்தவர்.

ஆடவர் பலர் போலன்றி என் தலைவன் தன் திறத்தில் என்றும் எவ்விடத்தும் மாறுபடாத் தன்மையோன் என்று கூறி அவன்மேல் தோழி கொண்ட ஐயத்தைப் போக்கித் தன் தலைவனின் ஒழுக்கத்தை உறுதிப்படுத்தினாள் என்க.

இது முல்லைத் திணையும் அவனறிவாற்ற வறிந்தேற்றியது என்னுந் துறையுமாம்.

கழகம் வளர்த்த மதுரையில் உ. த. கழக மாநாடு!

தனித்தமிழ் அன்பர்களுக்கொரு நற்செய்தி!

2-ஆவது உலகத் தமிழ்க்கழக மாநாடு

வரும்சிலை ('71 சனவரி) மாதத் தொடக்கத்தில்

மதுரையில் நடைபெற விருக்கின்றது.

உ. த: க. உறுப்பினர்களும் தமிழன்பர்களும் பேரளவில் வந்து கலந்து கொள்ள அணியமாகுங்கள்!

பிற விளத்தங்கள் பின்.

உ. த. க. வின் அதிகார வெளியீடு "முதன்மொழி"—படியுங்கள்.

www.thamizham.net - Free E book No 7425

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொன்விழா.

தமிழ்ப் பொத்தக வெளியீட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் "திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்" தொடங்கிக் கடந்த செப்டம்பர் 21-ஆம் பக்கலுடன் 50 ஆண்டுகள் நிறைவெய்துகின்றன. சிறந்த தமிழ்ப் பொத்தகங்களை அழகான முறையில் அச்சிட வேண்டுமென்ற நோக்கமுடைய இக் கழகம் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பங்காளிகளைக் கொண்ட பொது நிறுவனம். இதுவரை 1400 அரிய நூல்களை இக் கழகம் வெளியிட்டுள்ளது. பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலிருந்து அறிவியல், சட்டம் போன்ற புதுப்புதுத் துறைகளிலும் கழகம் நூல்களை வெளியிட்டுள்ளது. சிறுவர்களுக்காகச் சில நூறு நூல்களை வெளியிட்டது கழகமே. இதன் "பொன்விழா" வருகின்ற திசம்பரில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும்.

பொத்தக வெளியீட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள கழகம் வணிக நோக்கு மட்டுமே கொண்டதன்று. பல அறப்பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. தன் வருவாயில் பாதியை அறப்பணிக்கென்றே ஒதுக்கி அதன்வழி 'மறைமலையடிகள் நூல் நிலையம்', 'மறைமலையடிகள் கலைமன்றம்', 'சிவஞானமுனிவர் நூல்நிலையம்', 'குமரகுருபரர் குழந்தைப் பள்ளி', 'திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி', முதலிய நிலையங்களை நடத்தி வருகின்றது.

இத்தனைப் பணிகளையும் சீருறச் செய்து வருபவர் அதன் ஆட்சியாளராக வீற்றிருக்கும் திரு. வ. சுப்பையா அவர்களே. கழகத் தொடக்கத்திலிருந்தே அவர் அதன் சென்னை முகவராக இருந்து, 1944 முதல் அதன் ஆட்சிப்பொறுப்பாளராகப் பணியாற்றி வருகிறார். அவர்தம் 73-ஆம் அகவை செப்டம்பர் 22 உடன் நிறைவுறுகிறது. தம் வாழ்நாள் முழுவதையும் கழகப் பணிக்காகவே செலவிட்டு வரும் அவர்தம் தமிழ்ப்பணியைப் பாராட்டி இந்திய அரசு 'தாமரைத்திரு' (பத்மஸ்ரீ) என்ற சிறப்புப்பெயரை 1969-இல் வழங்கி அவரைப் பெருமைப் படுத்தியது. கழகத்தின் பணியும் திரு. சுப்பையா அவர்களின் தொண்டும் மேன்மேலும் சிறப்பதாக! O

www.thamizham.net - Free E book No 7425

பாவாணரா? யார் அவர்?

தமிழக எதிர்க்கட்சித்தலைவர் கருத்திருமனின்கேள்வி!

பாரிசில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்குச் சென்ற திரு. கருத்திருமன் சிங்கப்பூர் வழியாகத் தமிழகம் திரும்பினர். அக்கால் சிங்கப்பூர் 'தமிழ்முரசு' செய்தித் தொடர்பாளர் அவரைக்கண்டு கேட்ட கேள்விகளுக்கு விடையளிக்கையில் பாவாணரைத் தமக்குத் தெரியாதென்று கூறியிருக்கின்ருர். பாவாணரைப்பற்றிய செய்தியாளர் கேள்வியும், கருத்திருமனின் விடையும் இவை:

கேள்வி:— *உலகத் தமிழ் மாநாட்டுக்குப் பாவாணர் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் அழைக்கப்படுவதில்லையே ஏன்?*

விடை:— *என்னையே இரண்டு மாநாடுகளுக்கும் அழைக்கவில்லை எனக் கூறுகின்றேன்; அப்படி இருக்கையில் சொல்லுகிறீர்களே!*

கேள்வி:— *அதற்குச் சொல்லவில்லை; பாவாணர் மொழிநூல் அறிஞர். தமிழில் ஆழ்ந்த புலமை உடையவர்; ஆங்கிலத்திலும் அப்படியே! அவரை மாநாட்டுக்கு அழைக்காது ஒதுக்கி வைப்பது அவ்வளவு நன்ருக இல்லை.*

விடை:— பாவாணரா? யார் அவர்? *நீங்கள் சொல்லித்தான் கேள்விப் படுகின்றேன்.*

கேள்வி:— *முன்னர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தவர். இப்போது 'தென்மொழி' என்னும் தனித் தமிழ் மாத ஏட்டில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதி வருகின்ருர். பல புத்தகங்களும் எழுதி இருக்கிருர். தேவநேயப் பாவாணர் என்பது அவரது முழுப்பெயர். தமிழ்ப் பற்று மிக்கவர்; ஆரியம் என்ருல் அவருக்குப் பிடிக்காது.*

விடை:— *ஓ! அப்படியா?*

எப்படி கருத்திருமனின் விடை! பேராசிரியர்க்கெல்லாம் பேராசிரியராக விளங்கும் பெரும் பேரறிஞர் ஒருவரைத் தமிழகச் சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் அறிந்து கொள்ளாமல் இருக்கின்ருரே என்று அவரை நொந்து கொள்வதா? அல்லது அவ்வறிஞரைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாத தமிழக மக்களை நொந்து கொள்வதா? இல்லை, பேராசிரியர்கள் என்ற பெயரில் விளங்கும் எத்தனையோ தமிழ்க் கோடரிக்காம்புகளுக்குத் தீனிபோட்டு வளர்க்கும் தமிழக ஆட்சி, பாவணரை ஏறெடுத்துப் பார்க்காத காரணியத்தால்—வைக்க வேண்டிய இடத்தில் வைக்காத காரணியத்தால்—அவர் கருத்திருமன் போன்றவர் கண்களுக்குப் புலப்பட வழியில்லையே யென அரசினரை நொந்து கொள்வதா? இல்லை. தமக்கும் தமிழ்க்கும் வாழ்வளிக்காத தமிழ் மண்ணில் பிறந்து விட்டதற்காகப் பாவாணரை நொந்து கொள்வதா? யாரை நொந்துகொள்வது?

www.thamizham.net - Free E book No 7425

இவர்தாம் பாவாணர்... !

பாவாணரைத் தெரியாத 'கருத்திருமன்'கள் கவனிக்க!

-பெருஞ்சித்திரன்.

பளபளப்பான கருத்த முகம்; ஒளி நிரம்பி வழியும் கூரிய விழிகள்; அகன்று ஏறிய நெற்றி. அடர்த்துச்சிலிர்க்கும் அரிமாமீசை; ஏக்கழுத்து; பீடுநடை; பெருமிதமான உடை; அறிவு தெறிக்கும் கணீரென்ற பேச்சு; குழந்தை உள்ளம்-இவற்றின் மொத்த உருவம் பாவாணர். பாவாணர் எனில் மொழியியல் ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் ஒருவரே.

தமிழ்மொழி ஆய்விலேயே நாற்பதாண்டுகள் மூழ்கித் திளைத்த இப்படிப்பட்ட பேரறிஞர் ஒருவரைத் தமிழகம் இந்நாள் வரை கண்டதே இல்லை. இவர் வாயினின்று சரமாரியாக வந்து விழும் தனித்தமிழ் ஆராய்ச்சிக் கருத்துகளை இதுவரை எந்த அறிஞரும் தமிழ்மொழிக்கு வழங்கிவிடவில்லை. தமிழ்த் துறைக்கு அவர் தொண்டு புதியது. தமிழர்க்கு அவர் கருத்துகள் மயக்கறுப்பன; மேனாட்டார்க்கு அவர் நூல்கள் வியப்பளிப்பன. அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அரியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தமிழ் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளும் ஒட்டுமொத்த முயற்சிக்குப் 'பாவாணர்' என்றே பெயரிடலாம்.

அவர் கருத்துகள், முறிக்கப்பட்ட தமிழனின் முதுகெலும்பைத் தூக்கி நிறுத்தும் வல்லமை வாய்ந்தன; தூங்கிக் கிடக்கும் தமிழனைத் தட்டியெழுப்பும் வீறு நிரம்பியன; மங்கிக் கிடக்கும் தமிழ் மொழியின் செம்மாப்பினை உலகமெல்லாம் பறைசாற்றும் ஆற்றல் நிறைந்தன; மொழியாராய்ச்சி என்னவென்றே அறியாமற் கிடந்த தமிழனுக்கு மொழியுணர்வூட்டி, அதன்வழிப் பண்டைய வரலாறுணர்த்தி எழுச்சி பெறச் செய்வன. அவர் பேச்சும் எழுத்தும் தமிழரின் ஒவ்வொரு செவியிலும் அறிவிலும் பட்டு எதிரொலித்தல் வேண்டும். அப்

www.thamizham.net - Free E book No 7425

பொழுதுதான் தமிழன் தன்னுணர்வு பெறுவான்; தன்மானங்கொள் வான்; தன்னறிவுணர்வான்; மொழிப்புலங் காணுது வழிப்புலந்தப்பிய தமிழனுக்கு அவர் ஊட்டும் விழிப்புணர்வும், அதினின்றெழும் ஒவ் வோர் ஆய்வு முடிவும் தமிழர்க்கு என்றென்றைக்கும், ஒளிகாட்டி நிற்கும் என்பதில் ஐயமே யில்லை.

ஆனுல், வெற்றுரவாரச் சொற்புகழ்ச்சியும் விளம்பரப் போலிமை யும் இக்காலத்துக் கற்ருரிடத்தும் நிரம்பி வழியும் கரணியத்தால் மெய்ம்மைக்கும் பொய்ம்மைக்கும் வேறுபாடு காண்பது மிக மிக அரிதாக உள்ளது. அன்ருடம் நடைபெற்றுவரும் அரசியல் சூழ்ச்சிகளாலும், அறியாமையாலும் வறுமையாலும்பிற கல்வித்துறை களின் மேம்பாடுகள் அனைத்தையும் எடுத்துக் கூறவும் ஆளின்றிச் சீந்துவாரற்றுக் கிடக்கும் தற்காலத் தமிழகத்தில் ஏன் பிறந்தோம் என்றுஅறிஞர் அலமந்து கிடக்கின்றனர். அறிவியலும் வாழ்வியலும் மேனுட்டாரை எந்த அளவிற்கு ஆட்கொண்டனவோ அந்த அளவிற் குத் தமிழகத்தை அறியாமையும் மூட நம்பிக்கையும் ஆட்கொண்டுள் ளன. இவ்விருள்சேர் இருநிலையும் ஒருசேரப் பெருகிக்கிடக்கும் இந் நாட்டில் போலிமையும் புன்மையுமே தலைதூக்கி நிற்கின்றன; அதிகாரம் பெறுகின்றன. எனவே உண்மை வலிவற்றுப் போகின்றது. இந்நிலையில் பாவாணரைப் போன்ற பேரறிஞர்களை நாடு இனங்கண்டு கொள்வது குதிரைக்கொம்பே!

தமிழகத்தின் தவக்குறையென்று நாம் எல்லாருமே சொல்லிக் கொள்கின்ற அறிஞரைப் பேணுத குறை தமிழ்நாட்டு மண்ணிலோ, மரங்களிலோ விளைவதன்று. அப்படிச் சொல்லியே தப்பித்துக்கொள் ளும் நம் ஒவ்வொருவரின் மனத்திலும் விளைவதுதான் அது வெறுங் குறையாக மட்டும் நின்றுவிட வில்லை. தமிழக வரலாற்றிலேயே என் றென்றைக்கும் துடைத்தெறியப்படாத கறையாகவே படர்ந்திருக்கின் றது. இதனை நம்மில் எல்லாரும் திருப்பித் திருப்பி ஒருவர் முகத்தில் ஒருவர் பூசிக்கொள்கின்ருேமேயன்றி, இதனைப் போக்குகின்ற முயற் சியை நம்மில் எவரும் எக்காலத்தும் இன்று வரை செய்யவில்லை. காரணம், நமக்கிருக்கும் பகட்டான பேச்சுதான்; பார்ப்போரை மயங்க வைக்கும் நடிப்புதான்; நமக்கேற்பட்ட அரசியல் திளைப்புதான்; அறிவை அறிந்துகொள்ளா மறுக்கின்ற அறியாமைச் செருக்குதான்; மொத்தத்தில் நம் உடலில் ஊறிக்கிடக்கும் இருண்ட வாழ்க்கையின் ஈடுபாடுதான். இந்நிலைகள் இந்தத் தலைமுறையிலேயே அடியோடு

www.thamizham.net - Free E book No 7425

தொலைக்கப்பட்டாலன்றி, இனி, அடுத்த தலைமுறையிலிருந்து தமிழக மண்ணில் அறிஞர்களே தோன்றமாட்டார்கள் என்பது திருக்குறள் போன்ற உண்மை; தொல்காப்பியம் போன்ற உறுதி; பாவேந்தர் பாடல்கள் போன்ற தெளிவு.

தமிழனின் வீழ்ச்சிக்கு அரசியல்காரர்களும், குமுகாயச் சீர்திருத்தக்காரர்களும் எத்தனையோ காரணங்களைத் தம்தம் வரலாற்றறிவிற் கேற்பக் கூறினாலும் உண்மையான காரணங்கள் இரண்டு. ஒன்று தமிழனின் குமுகாயச்சரிவு; இரண்டு தமிழனின் மொழிச்சரிவு. இவ்விரண்டு சரிவுகளும் ஆரியப் பார்ப்பனர்கள், என்று இத்தமிழக மண்ணில் காலடி வைத்தனரோ அன்றே தொடங்கின. இச்சரிவுக்குத் தடுப்புச்சுவர் கட்டக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகவே தமிழன் முயன்றான். ஆனால் ஆரியத்தால் ஏற்பட்ட சரிவை ஆரியத்தைக் கொண்டே சரிசெய்ய முயன்றதால் தோல்வியே கண்டான். இந்த இரண்டு சரிவுகளுக்கும் இந்நாட்டிலுள்ள சமயங்களே மண்வெட்டிகளாகப் பயன்பட்டன. முதற்சரிவைக் கண்டுகாட்டியவர் பெரியார் ஈ. வே. இரா. இரண்டாம் சரிவைக் கண்டுகாட்டியவர் மறைமலையடிகளார்.

ஈ. வே. இரா. வின் குமுகாய முயற்சி மலையத்துணையென்றாலும், அதனால் இதுவரை ஏற்பட்டிருக்கின்ற பயன் ஒரு குன்றத்துணையே. அடிகளாரின் மொழிமுயற்சி கடலத்துணை யென்றாலும், அதனால் ஏற்பட்ட பயன் ஒரு கால்வாய் அத்துணையே. இவர்கள் செய்த இவ்வளவு அரும்பெரும் முயற்சிகளும் இப்படிப் பயனிற்குன்றியமைக்கு நம்மிடம் உள்ள பக்தவத்சல சுப்பிரமணியன்களும், வையாபுரித் தெ. பொ. மீ. க்களுமே காரணியம் ஆவர். இத்தகையோரின் உள்ளரிப்புகளாற் பெரியாரின் குமுகாயத் தொண்டு அடிபருத்து நுனி சிறுத்துப் போனது; அடிகளாரின் மொழித்தொண்டு அடியகன்று இடை குறுகிப்போனது; இக்கால் இவ்விரு தொண்டு முயற்சிகளும் இளைஞர் தலைமுறையினரின் தோள்களைத் தாவிப் பற்றிக்கொண்டுள்ளன. இத்தலைமுறையில் இவற்றில் வெற்றியைத் தேடிக் கண்டானானால் தமிழன் ஆரியத்தினின்று பிழைத்தான்; இல்லெனில் ஆரியத்திற்கே பிழைத்தான்!

பெரியாரின் குமுகாயப் போராட்டம் புறந்தெரிவது; அடிகளாரின் மொழியியற் போராட்டம் அகமொடுங்கியது. அடிகளாருக்குப்பின் இப்போராட்டம் இருளுள் புகைபோல் ஒளி மழுங்கியது. பாவாணரின்

www.thamizham.net - Free E book No 7425

விடாமுயற்சியோ, அதனை மீண்டும் புகையுள் தீப்போல் ஒளிசேர்த்தது.

பாவாணர்க்கு இக்கால் அறுபத்தெட்டாண்டு. 7-2-1902-இல் நெல்லைமாவட்டத்தில் உள்ள சங்கரநயினார்கோவிலில் பிறந்து. கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டிலேயே தம் முழுப் பொழுதையும் செலவிட்டுவரும் இம்மொழியியல் மூதறிஞர் இதுகாறும் தமக்கென ஓர் இடத்தையோ, ஒரு வீட்டையோ கூட உடைமையாக்கிக்கொள்ளாமல், வேலூர் காட்டுப்பாடியில் 50 உருபா குடிக்கூலிக்கு ஒரு சிறு வீட்டில் வாழ்ந்து வருகின்றார் எனில், இத்தமிழகம் அறிஞர்களைப் புறக்கணிக்கின்றது என்று கூறுவதா? அல்லது இதில் உள்ள மக்கள் அறிவைப் புறக்கணிக்கின்றார்கள் என்று கூறுவதா?

கருத்துகளைத் தம் அதிகாரங்களுக்கும், அரசியற் சாய்காலுக்கும் ஏற்ப வளைத்துக் கொள்ளும் வையாபுரி, தெ. பொ மீ. போன்ற சிலரின் திறனையோ, அல்லது கழகநூற் காட்சிகளைக் கற்பனை நூல்களாக்கி விற்பனை செய்து பொருள் குவிக்கும் பேராசிரியர் சிலரின் போக்கையோ, அல்லது எவரைக் கொண்டோ எழுதுவித்துத் தம் பெயரைப் பொறித்து வெளியிட்டுக்கொள்ள இசைவு தந்து, அதற்கீடாகப் பெரும் பொருள் பெற்றுக்கொள்ளும் நூலாசிரியர்கள் சிலரின் கள்ள வாணிக அமைப்பையோ பாவாணர் கற்றிருந்தால் அல்லது கைக்கொண்டிருந்தால், இவரும் தமக்கென வீடுகளும் மனைத்தோட்டங்களும் தெருவுக்குத் தெரு, மலைக்குமலை வாங்கிப் போட்டுக் கொண்டு இயங்கியில் ஊர்ந்துகொண்டு திரியலாம். ஆனால், தன்மானத் திறவுகோலைக் கொண்டுதான் அறிவுப் பூட்டைத் திறக்க முடியும் என்று கண்ட மொழிவரலாற்றுப் பேராசிரியராகிய இவர் இத்தகைய போலித் தன்மைகளைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

இவர் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்ப்பது தமிழ்; கொண்டது தமிழ்; கொடுப்பது தமிழ்; விண்டது தமிழ் விளக்குவது தமிழ் என்று தமிழே என்பாகவும், தசையாகவும் குருதியாகவும் வாய்க்கப்பெற்ற தமிழின் முழுஉருவம் பாவாணர் என்னின், வியப்படையவும் வேண்டா; மிகையென்று கருதிவிடவும் வேண்டா; இக்கட்டுரையை எழுதும் இந்தக்கையும், அதை ஆட்டுவிக்கும் இந்த மனமும் எளிதே எழுதிவிடாத சொற்கள் இவை. கோடிப் பொன் கொட்டிக்கொடுத்தாலும் "இவர் தமிழின் மொத்த உருவம்" என்னும்

www.thamizham.net - Free E book No 7425

நான்கு சொற்களை இக்கையினிடத்திருந்து தகுதியுள்ளவர்கள் தவிர வேறு எவரும் எழுதி வாங்கிவிட முடியாது. 'தமிழின் ஏற்றத்தைப் பற்றி எவ்வளவும் உரையுங்கள்; ஆனால் ஆரியத்தை-வடமொழியைப் பற்றி எந்தக் கருத்தையும் கூறாமலிருங்கள்'' என்று இவருக்குப் பல்கலைக்கழக அதிகாரிகள் அறிவுறுத்தியும்கூட, ''அப்படி என் கருத்தை இருட்டடிப்புச் செய்து கொண்டு நான் மானத்தோடு உயிர்வாழ முடியாது'' என்று மறுப்புரை கூறி, நடுவணரசு கொடுக்க முன்வந்த இலவசத் தொகையையும் பல்கலைக் கழகம் கொடுத்துக் கொண்டிருந்த ஊதியத் தொகையையும் ஒருங்கே இழந்த இந்தப் பெரும் பேராசிரியரைப் போல் வேறொரு பேராசிரியரை, தமிழ் வரலாற்றிலேயே காண முடியாது. தாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டிவரும் என்று அறிந்திருந்தும், ''எனக்கு வறுமை உண்டு; மனைவி மக்களும் உண்டு; அதோடு கொஞ்சம் மானமும் உண்டு'' என்று உரைத்த இவர் பெருமிதத்தை என்னென்பது! வறுமையிற் செம்மையை என்னென்றெழுதுவது? காற்காசுக்குத் தமிழைக் காட்டிக் கொடுக்கும் கயவர் மலிந்த இந்நிலத்துப் பாவாணர் தப்பிப் பிறந்த ஒரு தமிழ்ப்பிறவி!

இவரின் அளப்பரிய தமிழாற்றலை முழுவதும் தமிழகம் பயன் படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இவர் இதுவரை எழுதிய செந்தமிழ் நூல்கள் இருபத்தொன்று. இன்னும் ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் இவரால் எழுதப்பட வேண்டியிருக்கின்றன. அவை அத்தனை நூல்களும் தமிழ் மொழிக்கு ஏற்றம் உரைப்பன. வீழ்த்தப்பட்ட தமிழனுக்கு விழிப்பூட்ட வல்லன. இவர் எழுத விருக்கும் தமிழ்மொழிச் சொல்லியல் லகரமுதலி இவர் ஒருவராலேயே எழுதவியலும் அரும்பெரும் நூல் ஆகும். பல்கலைக் கழகக் காசுகளைக் கைநிறைய வாங்கிக் கணக்கிட்டுக்கொண்டு, இன்று தமிழகத்தில் உள்ள அத்தனைப் பேராசிரியர்களும் ஒன்று சேர்ந்தாலும் எழுதவியலாத அவ்வகரமுதலி தமிழுக்கே அழியாத சொத்தாகும். தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக்காக்கும் அரிய ஒளிஞாயிறாகும் அதனை வெளிப்படுத்த ஏறத்தாழ ஐம்பதினாயிரம் உருபாக்கள் ஆகும். அத்தொகை தமிழர்க்கோ, தமிழக அரசுக்கோ ஒரு பெரிய தொகையன்று. எத்தனை எத்தனை வகைகளுக்கோ தமிழ் என்னும் பெயரால் இன்று பெருந்தொகை பல்கலைக் கழகங்களாலும் அரசாலும் செலவிடப்பெற்று வருகின்றது. இப்பெருந் தொகையுள் ஒரு சிறு அளவுத் தொகையை இவர் முயற்சிக்கு ஒதுக்கிக் கொடுத்தாலும், அஃது ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்

www.thamizham.net - Free E book No 7425

பட்டுக் கிடக்கும் தமிழ்மொழியை மீட்கவல்லது. மறைமலையடிகளால் தோற்றுவிக்கப்பெற்று இவரால் பேணிக் காக்கப்பெறும் தனித்தமிழியக்கம் செழிப்படைய அடையத்தான் தமிழ்மொழி துலக்கமுற்று விளங்கும். அப்பொழுதுதான் தமிழ் அறிவியல் மொழியாகவும் வாழ்வியல் மொழியாகவும் வளம்பெறும். இவரால் எழுதப்பெற்று இக்கால் வெளிவந்த "திருக்குறள் தமிழ்மரபுரை" இவர்தம் இலக்கிய இலக்கணப் பயிற்சிக்கொரு கலங்கரை விளக்கம். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தென்மொழி இலக்கணப் புலமையும், சமற்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், உருது, இந்தி, ஆங்கிலம் முதலிய வடமொழி இலக்கணப் புலமையும் ஒருங்கே கைவரப்பெற்ற மொழியியல் ஞாயிறுன இவர் தமிழகத்தைப் புரிந்துள்ள அளவுக்குத் தமிழகம் இவரைப் புரிந்து கொள்ளுமானல்-பயன்படுத்திக் கொள்ளுமானல் தமிழுக்கு என்றும் அழிவில்லை; தமிழினத்துக்கும் என்றும் வீழ்ச்சியில்லை; இவர் தலைமையில் அந்த நல்லநாளை நோக்கி நாம் நடையிடுவோமாக!

(பறம்புக்குடி மாநாட்டு மலரிலிருந்து எடுக்கப்பட்டது.)

உலகத் தமிழ்க் கழகத்திற்கென ஒரு கொள்கை முரசம்!

உ. த. க. வின் அதிகார இதழ்!

முதன் மொழி.

தனித்தமிழ் மாதிகை.

சிறப்பாசிரியர்:

மொழிப்பேரறிஞர்: ஞா. தேவநேயப்பாவாணர் க. மு.

ஆசிரியர்,

பேரா. தி. வை. சொக்கப்பனார் க. மு.

விரைவில் வெளிவரவிருக்கின்றது-

தனியிதழ்: 20 காசு.

ஆண்டுக்கட்டணம்: உரு. 2-50.

பிற விளக்கங்கட்கு

முதன் மொழி

தமிழ்க்குடில், காண் வெண்டுச்சாலை, அளகாபுரம், சேலம்-4.

www.thamizham.net - Free E book No 7425

காலிங்கம்

பேராசிரியர். க. ப. அறவாணன். க. மு.

0 0. திருக்குறளுக்கு எழுதப்பட்ட பத்து உரைகளுள், பரிமே லழகர் உரை முடி போன்றது. அவரின் உரைச் செழுமைக்கு உர மிட்டவர்கள் அவருக்கு முன்பு இருந்த உரையாசிரியர்கள் என்பதில் ஐயமில்லை. இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் காலிங்கர். இவரது உரை பற்றிய அகலமான—ஆழமான ஆராய்ச்சியே இக்கட்டுரை.

1.0. காலிங்கர்—பெயர்க்காரணம்— இவர் காளிங்கர்' என்றும் 'காலிங்கர்' என்றும் குறிக்கப் பெறுகிறார். 'காலிங்கர்' என்ற சொற் றொடர் கல் வெட்டுகளிலும்,[1] சோழர்கள் வழங்கிய பட்டப் பெயர் களிலும், பாண்டியர் வழங்கிய அரியணைப் பெயர்களிலும்,[2] வழங்கி யிருப்பதால், காலிங்கர் என்ற பெயரே சரியானதாகக் கூடும்.

1.1. ஊர்:— இவர் ஊரை அறிவதற்கான அகச்சான்று எது வும் உரையில் காணப்படவில்லை.

1.1. (அ) ஆனால், வைக்கோற் போர் (435) கும்பி (735) பட்டிமாடு (1074) என்ற சொற்களை ஆளுகிறார். இச்சொற்கள் இன் றும் பெரும்பான்மையாகச் சோழநாட்டில் வழங்குகின்றன.

1.1.1. அன்றியும் கள்ளர் சாதியினர் இன்றும் இப்பகுதியில் 'காலிங்கராயர்' என்று பெயர் வைத்துக் கொண்டு வாழ்ந்து வருகின் றனர்.

1.1. 2 கி. பி. 854-இல் குடமூக்கில் பாண்டியன் சீமாறன் சீபல்லவனுக்கும் சோழர், கங்கர், பல்லவர், காலிங்கர். மாகதர் ஆகி யோருக்கும் பெரும்போர் நடந்தது. இச்செய்தியை, நிருபதுங்க வர்ம னின் வாகூர்ச் செப்பேடுகள் எடுத்துக் காட்டுகின்றன. பாண்டியரது வரலாற்றைக் கூறும் சின்னமனூர்ச் செப்பேடுகள், பாண்டியரை எதிர்த்தவருள் காலிங்கர் என்ற பகைஞரையும் குறிக்கின்றன.

'கொங்கலரும் பொழில் குடமூக்கில் போர்குறித்து
வந்தெதிர்ந்த கங்க பல்லவ சோழ காலிங்க மாகதாதிகள்
குருதிப் பெரும்புனல் குளிப்பக் கூர்வெங்கணைத் தொடை நெகிழ்த்துப்
பரிதி ஆற்றலொடு விளங்கின பரசக்கிர கோலாகலன்
என்று தெரிவிக்கின்றது.[3]

1. பார்க்க: சின்னமனூர்ச் செப்பேடுகள், வாகூர்ச் செப்பேடுகள்.
2. சாசனத் தமிழ்க்கவி சரிதம் பக்: 161.
3. பாண்டியர் வரலாறு பக்: 65.

www.thamizham.net - Free E book No 7425

1.1.3 கி. பி. 1070-இல் ஆண்ட முதல் குலோத்துங்க சோழன் காலத்திலும், அவன் மகன் விக்கிரம சோழன் காலத்திலும், 'காலிங்கர்கோன்' என்ற அரசியல் அதிகாரி இருந்ததைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. வேணாடு, மலைநாடு, பாண்டிநாடு, வடநாடு முதலியவற்றோடு, முதல் குலோத்துங்க சோழன் நடத்திய போர்களில் தலைமை தாங்கி வெற்றிபெற்ற படைத்தலைவன் இவனே யாவான். இவனது வெற்றிக்கு அடையாளமாகக் காலிங்கராயன் என்ற பட்டப் பெயரையும் குலோத்துங்க சோழன் வழங்கினான் என்று கல்வெட்டு காட்டுகின்றது.

1.1.4. போரால் மறச்செயல் ஆற்றிய மறவர்களுக்குப் பட்டமளித்துப் பாராட்டும் வழக்கம் சோழ வேந்தர்க்கு உண்டு. சோழ வேந்தர்கள் வழங்கிய பட்டங்களுள் ஒன்று காலிங்கராயர் என்பதாகும். [4]

1.1.5. 'ராயர்' என்ற சொல் 'ராஜா' என்ற சொல்லின் தற்பவ வடிவமாகும். 'காலிங்கர் கோன்' என்ற வழக்கத்தைக் காணுகையில், 'ராயர்' என்ற சொல்லுக்கு நேர் தமிழ்ச் சொல்லாக (ராஜா > ராயர் = கோன்) வழங்கியிருத்தல் கூடும். ['ராயர்' என்பதும் தமிழ்ச் சொல்லே. அரைசர்–(அரசர்)–அரையர்–ராயர் (பாவாணர் கருத்து)]

இவற்றை நோக்கும்போது, காலிங்கர் என்ற பெயர், சோழ நாட்டிலேயே பெருவழக்காகவும் சிறப்பு வழக்காகவும் இருந்திருப்பதை அறியலாம். ஆதலால் காலிங்கர் சோழநாட்டினர் என்னும் அளவில் நாம் ஏற்றுக்கொள்ளலாம். [5]

1.2. காலிங்கரின் காலம்:— இவர் பகுத்துள்ள காமத்துப்பால் இயல் பகுப்பு திருவள்ளுவமாலை தொடித்தலை விழுத்தண்டினார் பாடிய பாட்டை ஒட்டியது. இத்திருவள்ளுவமாலை தனிநூலாக வழங்கத் தொடங்கிய காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு. காலிங்கரின் இயல்

4. சோழர் அரசியல் III. பக். 117.

5. பாண்டிய வேந்தர்கள் தம் அரியணைகட்குக் காலிங்கராயர் என்று பெயரிட்டு அழைத்தமையும் (பாண்டியர் வரலாறு பக். 111) நீர் கோலிற்று (715) என்று காலிங்கர் வழங்கும் சொல் வழக்கும், 'ராயர்' என்ற பின்னிணைப்புப் பெயர், பிற்கால நாயக்க மன்னர்கட்கே பெரும்பான்மை வழங்கியது என்பதும், காலிங்கர் சோணாட்டார் என்ற முடிவுக்கு எதிராக இருப்பன.

www.thamizham.net - Free E book No 7425

பகுப்பு திருவள்ளுவமாலையை ஒட்டி இருப்பதால் அவர் காலமும் அக்காலமாக இருக்கலாம்.[6] கல்வெட்டுகளில் காலிங்கர் என்ற பெயர் தனித்துச் சிறந்து விளங்கிய காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு அளவில்தான் என்பது சின்னமன்னூர்ச் செப்பேடுகளால் அறியலாகும் செய்தி.

1.2.1. பரிமேலழகர் சில இடங்களில் பொருள் வேறுபாட்டுக்காகவும், பாடவேறுபாட்டுக்காகவும் சுட்டிக் காட்டுகின்ற 'உரைகாரர்' காலிங்கர்தான் என்பது ஆராய்ச்சியால் புலனாகின்றது. நிறைந்த பாடவேறுபாடுகளும் பொருள் வேறுபாடுகளும் இவர் உரையில் காணப்படுகின்றன. அதிகாரங்களுக்கே வேறுபெயர் வைத்துக்கூட வழங்கியிருக்கிறார். குறட்பாக்கள் ஓரிரு இடங்களில் அதிகாரம் விட்டு அதிகாரங்கள் கூட மாறிக்கிடக்கின்றன. வந்திருக்கும் உரைகளில் இவருடைய உரையில்தான் மிகுதியான குறட்பாக்களுக்கு உரைகள் இல்லை. இவையெல்லாம் காலிங்கர் உரையின் பழமையைக் காட்டுவனவாகக் கொள்ளலாம். ஆகையால் மற்றைய உரையாசிரியர்களுக்கெல்லாம் இவர் முந்தியவர்; கி. பி. 9-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தவர் என்று இப்போதைய சான்றுகளை வைத்துக் கொண்டு கருதலாம்.

1.3. காலிங்கரின் சமயம்:— ஒருவரது சமயத்தை அவரது சொந்தப் படைப்பு நூலை வைத்துக் கொண்டுதான் அறிதல் சாலும். உரையாசிரியராக வந்துவிடும்பொழுது மூல நூலாசிரியரின் கொள்கை நிழலில் உரையாசிரியர் மறைந்து விடுகிறார். ஆகவே ஓர் உரையாசிரியரின் உரையைக்கொண்டு மட்டுமே அவரது சமயத்தை அடையாளம் கண்டு கொள்வதென்பது கடினமானது. எனினும் உரையாசிரியரின் கொள்கைச் சாயல் அவரது உரைகளில் படிந்திருக்கும். அவற்றை நுனித்தறிந்தே அவரது சமயத்தை அறிந்துணரலாம். ஆனால் அதுதான் முற்றிலும் சரியானது என்பதாகாது.

1.3.1. காலிங்கர் துறவை வலியுறுத்திச் சிறப்புரை எழுதவில்லை; வள்ளுவர் காட்டும் துறவு, காமம் சான்ற கடைக்கோட்காலை மாந்தன் கொள்ளலாகும் முதுமைத் துறவே என்பது காலிங்கர் கொள்கையாகும் (349). சமணர்களது துறவு இதுவன்று.

6. திருக்குறள் காமத்துப்பால் காலிங்கர் உரைப் பதிப்பு—தி. பொ. பழனியப்பபிள்ளை 1945 முன்னுரை பக்-X

www.thamizham.net - Free E book No 7425

1.3.2. வேட்டல் (யாகம்) பற்றிய இடங்களில் (259, 328) வள்ளுவர் கருத்தை ஒட்டி விரிவான மறுப்பெழுதவில்லை. வேட்டல் சமணர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

1.3.3. 610-ஆம் குறளில் 'அடியளந்தான்' என்பதற்குத் திருமால் என்றே வெளிப்படையாகப் பொருள் உரைக்கிறார். சமணரா யிருப்பின் வேற்றுரை காண முயன்றிருக்க வேண்டும்.

1.3.4. 1103-ஆம் குறளில் 'தாமரைக் கண்ணான் உலகு' என் பதற்கு 'அயன்உலகம்' என்று எழுதியவர் சிறப்புரையில், 'மாயவன் உலகு' என்றும் கொள்ளலாம் என்று எழுதுகிறார். சமணர்கள் கருதும் பேரின்ப வெளியை, (பொன்னெயில் வட்டம்) இங்கே அவர் சுட்டிக்காட்டவில்லை;

1.3.5. குறள் 543-இல் 'அந்தணர் நூல்' என்பதற்குப் பொதுப்பொருள் காணுமல், [பிராமண] அந்தணர்களது வேதம் என்ற கருத்தில் உரை கண்டிருக்கிறார். சமணராயின் வேறு பொருள் கண் டிருப்பார்.

1.3.6. ஆரியமறைவழிப் பெண் தெய்வங்களாகிய 'சீதேவி', 'மூதேவி'யைக் குறள் 617-இல் வெளிப்படையாகச் சுட்டுகின்றார். 167-இலும் சுட்டுகிறார்.

1.3.7. அந்தணரை உயர்ந்தோராக எடுத்துக் காட்டுகின்றார். சமணர்களுக்கு வருணப்பாகுபாட்டில் நம்பிக்கை இல்லை. சமண சமயம் ஆரிய எதிர்ப்புச் சமயமாகும்.

1.3.8. ஆரிய மறைகளின் மீது அளவற்ற நம்பிக்கை காட்டு கின்றார்; சமணராயின் காட்ட வேண்டியதில்லை.

1.3.9. கடவுள் வாழ்த்தில், அருகதேவனை வெளிப்படையாகக் காலிங்கர் குறித்திருக்கலாம். அவ்வாறு எங்கும் குறிக்கவில்லை. அறவாழி அந்தணன் என்பதையாவது அவர் அருகதேவன் என்று எடுத்துக்காட்டியிருக்கலாம். ஆனால் காட்டவில்லை.

1.3.10. மழித்தலும் நீட்டலும் வேண்டா என்பதில் மழித்தல் சமண, பௌத்தக் கொள்கைக்கு எதிரானது. இவரோ, மழித்தலும் நீட்டலும் என்பதனோடு துவராடை உடுத்தலையும் சேர்த்துக் கண் டிருக்கிறார்.

1.3.11. மேற்கண்ட காரணியங்களைக் கொண்டு இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் அல்லர் எனத் தருக்கமிட வழியுண்டு.

www.thamizham.net - Free E book No 7425

1.3.12. ஆனால் காலிங்கர், 'சீவர்' (கு. 345) என்றும் 'முத்தி' என்ற முடிந்தநிலம் (கு. 24) என்றும், முக்தர் (3. 6. 10) என்றும், பல உயிர்ப்பிறப்பு மாந்தர்க்கு உண்டு (121) என்றும், முற்பிறப்பிலேயே வாழ்க்கை ஒழுங்கு அமைந்து கிடக்கிறது (201) என்றும், பேரின்ப முக்தி (346) என்றும், பிறவாமைதான் முக்தி (262) என்றும், உத்தரகுரு (580) என்றும், குறிப்பதால் சமண சமயத்தாரோ என்று எண்ண வேண்டியுள்ளது.

2.0. பகுப்பும் வைப்பும்:— அறத்துப்பால், பொருட்பால் காமத்துப்பால் என்ற மூன்று பகுப்பினுள்ளும், ஒவ்வொருபாலுக்கு முன்னே அப்பால் பற்றிய பகுப்பையும் பரிமேலழகர் விரித்தெழுது கிறார். காலிங்கர் பால் பகுப்பிற்கான எந்த விளக்கத்தையும் தர வில்லை. அறத்துப்பாலை, பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற நான்கு பகுப்பாகப் பகுத்துக் காட்டுகிறது, திரு வள்ளுவமாலை. இதனை ஒட்டியே பரிமேலழகர், மணக்குடவர், பரிப் பெருமாள், பரிதியார் ஆகியோர் பகுத்துள்ளனர். பரிமேலழகர் தம் உரையிலும் பாயிரவியல் என்று தனித்துச் சுட்டிக்காட்டவில்லை. ஆனால் காலிங்கர் 35-ஆம் குறள் உரையின் இறுதிப் பகுதியில், "பாயிரம் நான்கும் முடிந்தது" என்றும், அறத்துப்பால் முடிவுரையில் 'பாயிரம் நான்கு' என்றும் தனித்துத் தெளிவுபடுத்துகிறார்.

'பால்மூன்றும் வேதப் பயனும் பாயிரநான்
கேலாகேள் இல்லறமும் நாலைந்தாம்–மேலாம்
துறவுபதின் மூன்று தொடர்ந்துஊழ்ஒன் றென்ப
அறியும்நெறி ஆய்ந்துஉரையார் தாம்'

என்ற பாடலைக் காலிங்கர் எடுத்துக் காட்டுவதிலிருந்து 1-4 பாயிரவியல், 5-24 இல்லறவியல். 25-37 துறவறவியல். 38-ஊழியல் எனப் பகுத்துக் கொண்டார் என அறியலாம்.

2.1. அறத்துப்பால் தொடக்கத்தில் எந்த விளக்கமும் கூறாத காலிங்கர் அப்பாலில் இறுதிப் பகுதியில், அறத்துப்பாலில் கூறப் பட்ட செய்திகளைப் பொருட்குறிப்பு என்று தலைப்பிட்டுத், 'தாம் எடுத்துக்கொண்ட தொடர்பின் தொகுதி இனிது முடிதற்கு வணங்கி வாழ்த்திய கடவுள் வாழ்த்தும், கடல் உலகு உய்தற்குக் காரணமாகிய கால மழையும் நிகழ் புயல் பருவத்து எய்துவதாகிய நீத்தார்பெருமையும், அது பின்வருதற்கு முதலுறுப்பாகிய அறன் வலியுறுத்தலும்,

www.thamizham.net - Free E book No 7425

2.2. "முத்தியும் தருதற்கு இயைந்த துறவறத்து இயல்பு விளங்கிய, துறவின் இயல்பு விளங்கிய மெய் உணர்வு என்னும் வீட்டின்பமும், அவ்வுணர்வு எய்தற்கு இடையூறாகும் அவாவினை அறுத்தலும், ஒருங்கு, அவ்வாறு அறுத்தோர்க்கும் மற்றோர்க்கும் வந்து ஊட்டும் உறுதிகொள் ஊழும் வள்ளுவக் கடவுள் வகுத்தமைத்துரைத்த எள்ளாறு சிறப்பின் அறத்துப்பால் முற்றும்" என்கிறார்.

2.3. பொருட்பாலின் இறுதியிலோ, காமத்துப்பால் இறுதியிலோ இதுபோன்ற பொருட்குறிப்புத் தொகுப்புரை காணப்படவில்லை. ஆனால் அப்பால்களின் தொடக்கத்தில் சிறிய குறிப்புரைகளைத் தருகிறார். [7]

2.4. பால்களின் தொகை, அதிகாரங்களின் தொகை, பாடல்களின் தொகை. ஆகியவற்றில் காலிங்கர் மற்றவரிலிருந்து வேறுபட்டிருக்கவில்லை. ஆனால் இயல்பகுப்பில் உரையாசிரியர் தத்தம் பொருட்கோடலுக்கு ஏற்பப் பல்வேறு வகையாகப் பல்வேறு பெயர்களில் பகுத்திருக்கின்றனர். இதனால், இயல்களின் வரையறையைத் திருவள்ளுவர் செய்திருக்கவில்லை என்று கருதலாம்.

2.5. பொருட்பாலைப் பகுத்துக் கொண்டதில் உரைகாரர்கள் தம்முள் மாறுபடுகின்றனர். பரிமேலழகர் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று பகுத்தார். மணக்குடவர் ஆறு இயல்களாகப் பகுத்துள்ளார். அரசியல், அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பவியல், குடியியல் என்று பகுத்துக் கொண்டார்.

2.6. காலிங்கர் இறைமாட்சி முதலாக, இடுக்கண் அழியாமை ஈறாக (39-63) அரசியல் என்றும், அதன்பின் வருவனவற்றை அமைச்சியல் என்றும், (64-108) வகுத்துக் கொண்டிருத்தல் வேண்டும். பரிமேலழகர் போன்று ஒழிபியலைத் தனியியலாகக் கொள்ளவில்லை போலும்.

2.7. காமத்துப்பாலைப் பரிமேலழகர், களவியல், கற்பியல் என்று இரண்டு இயல்களாகப் பகுத்துக் கொண்டார் காலிங்கர் தலைமகன் கூற்றுக்கிளவி (109-115), தலைமகள் கூற்றுக்கிளவி (116-127) இருபாற்கிளவி (128-133) என்று மூன்று இயல்களாகப் பகுத்துக் கொண்டிருக்கிறார். மணக்குடவர், உரிப்பொருள் அடிப்

7. திருப்பனந்தாள் திருக்குறள் பதிப்பு-பொருட்பால் பக்- 5
ஷ காமத்துப்பால்-பக். 5

www.thamizham.net - Free E book No 7425

படையில் ஐந்து பிரிவுகளாகக் கொண்டுள்ளார். குறள் முழுவதையும் காலிங்கர் ஒன்பது இயல்களாகப் பிரித்துள்ளார். ஏனைய உரைகளைப் போல் இவர் ஒவ்வோர் இயலிடத்தும் விரிந்த விளக்கங்கள் தரவில்லை.

3.0. அதிகாரப் பகுப்பு:— ஒவ்வோர் அதிகாரத்தையும் தொடங்கும்போது, அவ்வதிகாரத்தின் பெயர்க்காரணத்தையும், கடந்த அதிகாரத்தை அடுத்து வைத்த முறைவைப்புக்கான காரணத்தையும், பரிமேலழகர் மணக்குடவர் ஆகிய உரையாசிரியர் தவறாது காட்டுகின்றனர். ஆனால் காலிங்கரோ, ஒவ்வோர் அதிகாரத்தின் முன்னும் அதிகாரப் பெயர்க்காரணத்தை விளக்குவதில்லை. முந்திய அதிகாரத்தின் இறுதிக் குறளுரையின் இறுதிப்பகுதியில், வரும் அதிகாரத்தை இணைத்துக் காட்டுவது இவரது வழக்கம். அதனுள்ளும் அதிகாரத் தொடர்புக் காரணம் தருவாரேயன்றி, அதிகாரப் பெயர்க்காரணம் தருவதில்லை. இக்காரணமும்கூட எல்லா அதிகாரங்கட்கும் காட்டப்பெறவில்லை-அல்லது கிடைக்கப்பெறவில்லை. [8] இவ்வாறு விளக்கம் இல்லாமற்போன அதிகாரங்களாவன:—(1) வாழ்க்கைத் துணைநலம் (2) அன்புடைமை (3) இனியவை கூறல் (4) பிறனில் விழையாமை (5) பொறையுடைமை, (6) புறங்கூறாமை,

---

8. அதிகாரத் தொடர்வைப்புக்காரணம் இல்லாத பகுதிகளில், கடந்த அதிகாரத்தின் கடைசிக் குறட்பாவின் உரையும் காணப்படவில்லை. வரும் அதிகாரவைப்பின் காரணத்தை, நிகழ் அதிகாரத்தின் ஈற்றுக் குறளில் எடுத்துரைப்பது இவர் வழக்கம். மாறாக, ஈகையை அடுத்துப் புகழதிகாரம் வைத்ததன் காரணத்தை (ஈகை அதி: குறள் 10-இல் விளக்குவதோடு) புகழதிகாரத்தில் 'ஈதல் இசைபட...(231)' என்ற திருக்குறளிலும் "கீழ்ச்சொன்ன ஈதலின் பின்னரே புகழதிகாரம். என்னையெனின், அது பயக்கக் கருதி நிகழ்வது புகழாகலான் இவை இரண்டுமல்லது மற்றிவை போல்வன இலாபம் ஒன்றும் இல்லை, உலகத்தில் அறமியற்றும் மக்கட்கு என்றவாறு"- என்றுரைவிளக்கந் தருகிறார். இவ்விளக்கம் உள்ள மேற்கண்ட குறட்பாவை, ஒன்பதாம் குறளாகக் காட்டி இருக்கிறார் பதிப்பாசிரியர் (திருப்பனந்தாள் குறள் பதிப்பு), முன் அதிகாரத்தையும் பின் அதிகாரத்தையும் இவ்வுரை இணைப்பதால் இக்குறளைக் காலிங்கர் முதற் குறளாகவே வைத்திருந்தார் எனக் கருதலாம்.

www.thamizham.net - Free E book No 7425

(7) தீவினை யச்சம், (8) ஒப்புரவறிதல், (9) புலால் மறுத்தல், (10) தவம் (11) வெகுளாமை, ஆகியன!

3.1. வைப்பு முறையில், பரிமேலழகர் முறையிலிருந்து காலிங்கர் ஒரே ஓர் இடத்தில் மாறுபட்டிருக்கிறார். வாழ்க்கைத் துணைநலத் திற்குப்பின் புதல்வரைப் பெறுதலை வைக்கிறார் பரிமேலழகர். ஆனால் காலிங்கர் விருந்தோம்பலை வைக்கிறார். இஃது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை

3 2. அதிகாரப் பெயர்வைப்பில் வியப்பான வேறுபாடுகள் காலிங்கர் உரையில் காணப்படுகின்றன. ஏனை எல்லா உரைகாரர் களின் அதிகார வைப்புகளிலிருந்து. திருக்குறளில், 'குறிப்பறிதல்' என்ற ஒரே பெயரைஉடைய இரண்டதிகாரத்தைப் பொருட்பாலிலும், (அதி. 71). காமத்துப்பாலிலும் (அதி 10) காண்கிறோம். இவ்வாறு திருவள்ளுவர் வைத்திருப்பாரா என்பது ஐயத்திற்குரியதே. காலிங்கர், காமத்துப்பால் 110-ஆவது அதிகாரத்தைக் குறிப்புணர்தல் என்று மாற்றி அமைக்கிறார். இதுதவிர புணர்ச்சி மகிழ்தல் என்பதனைப் (அதி. 111), 'புணர்ச்சியின் மகிழ்தல்' என்றும், 'கண்விதுப் பழிதல்' (அதி. 118) என்பதனை, 'கண்விதுப்பழித்தல்' என்றும், 'அவர் வயின்விதும்பல்' என்பதை, (அதி. 127), 'அவர் வயின் விரும்பல், என்றும், பழைமை (அதி. 81) என்பதனைப் 'பழமை' என்றும் மாற்றி அமைக்கிறார், (தொடரும்)

மருத்துவத் துறையில் அரிய முயற்சி!

" முதல் சித்தன் "

(உடல்நலத் திங்கள் ஏடு)

பதிப்பாசிரியர்:

திரு. பண்டித. முத்துக்கருப்பப் பிள்ளை.

கடந்த நான்காண்டுகளாகத் தமிழ் மருத்துவச் சிறப்பினை அனைவர்க்கும் உணர்த்தும் வகையில் பெரும்பணி ஆற்றி வருகிறது. மருத்துவம், கணியம், சமயம், குமுகாயம், அறிவியல் பற்றிய பல அரிய கட்டுரைகளையும் அரசினரால் அவ்வப்போது வெளியிடப் பெறும் மருத்துவச் சார்பான சட்டதிட்டங்களையும் தாங்கி வெளி வரும் உயரிய தமிழ்த் தாளிகையாகும்.

நல்வாழ்வை விரும்பும் அனைவரும் வாங்கிப் பயன்பெறத்தக்க சிறந்த கருவூலம். உடனே உறுப்பினர் ஆகுங்கள்.

தனிப்படி 50 காசு. ஆண்டுக்கட்டணம் உரு. 5-00

தொடர்புகொள்க:— ஆசிரியர், "முதல் சித்தன்"

36, காசிமார் தெரு, மதுரை-1. (தெ. இ.)

www.thamizham.net - Free E book No 7425

மீன்களின் தாய்மையுணர்வு

சி. தமிழ்வென்றி (அறி. இ.,)

உலகை யியக்குவன எண்ணற்ற பொறிகளும், புன்மை சான்ற மாந்தர்தம் மூளைத்திறனுமே என்ற கணிப்பு தவறானதாகும். பாழ் வெளி நோக்கிச் செல்லும் உள்ளங்களையும் திருத்தி அன்புணர்வால் வாழ்விக்கச் செய்யும் தன்மையாலேதான் உலகம் நிலைக்கிறது! புடவியின் ஒவ்வோருயிரணுவும் இவ்வுணர்வால் உந்தப்பட்டுச் செயல்படுகிறது. இக்கட்டுரையின் வழி மீன்களின் அன்புணர்வை—சிறப்பாகத் தாய்மை யுணர்வைக் காண்போம்.

பெரும்பாலான மீன்கள் தாமிடும் முட்டைகளைப் பற்றிக்கருதுவதாகவே தோன்றவில்லை. ஆயின் சிலவகை மீன்கள் கூடுகளைக் கட்டி, அவற்றில் முட்டையிட்டு, அக்கறையோடு அவற்றைப் பேணிடும் தன்மை வியப்பூட்டுவதாகும். நாம் தாய்மையுணர்வு எனக் குறித்தாலும் மீன்களைப் பொறுத்தமட்டில் தாயைவிடத் தந்தையே தம் பிறங்கடைகளுக்காக மிக்க அக்கறை கொள்வது மறுக்கவொண்ணா உண்மையாகும்.

மீன்களமைக்கும் கூடுகள் அவ்வவ் வினங்களுக்கேற்பச் சிறிய பந்தைப் போன்றோ அல்லது பேரளவினதாகவோ அமையினும் அவை தம் பிறங்கடைமாட்டுச் செலுத்தும் அக்கறை வேறுபடுவதில்லை.

ஆற்றுநீரில் வாழும் சூரியமீன்கள் (Sunfishes) ஆழமற்ற குழிகளைப்போன்று கூடுகளைத் தோண்டுகின்றன. கூழாங்கற்களை விழிப்போடு அகற்றி மெல்லிய மணல்படுக்கைகளை யமைக்கின்றன. இந்நேர்த்தியான படுக்கைகளில் பெண்மீன்கள் முட்டைகளையிட ஆண் மீன்கள் (தந்தையர்) குஞ்சுகள் வெளிப்படும்வரை கூட்டைக் காக்கின்றன.

ஆப்பிரிக்காவில் காணப்படும் மீனுக்கு எலும்புடை மீன்கள் (Osteoglossidae) ஆற்று நீரில் இரண்டடி நீளத்தில் கூடுகளைக் கட்டுகின்றன. குறுக்காக நான்கு அடி அகலமுள்ள இக் கூடுகளின் சுவர்கள் பல விரற்கடையளவு திண்ணமுள்ளவை. புற்களின் தண்டுப் பகுதிகளைக்கொண்டு அமைக்கப்பெறும் இக்கூடுகளின் தரைப் பகுதிமிகத் தூய்மையாக வைக்கப்படுகின்றன.

www.thamizham.net - Free E book No 7425

சிம்னார்க்கசு (Gymnarchus) என்ற வகை மீன்கள் பெரிய மிதக்கும் கூடுகளைக் (Floating nests) கட்டுகின்றன. இக்கூடுகளின் 'சுவர்' நீர்மட்டத்திற்கும் பல விரற்கடைகட்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கும். இருவழிகள் கொண்ட இக்கூடுகளின் அமைப்பு முறை வியப்பிற் குரியதாகும்.

சேற்றில் வாழும் மீன்களில், "ஈருறுப்பால் மூச்சுவிடு மீன்கள்" (Protopterus) [செவுள் (Gills) உயிர்ப்புப்பை (Lungs) ஆகிய ஈருறுப்புகளாலும் மூச்சு விடுவதால் இம்மீன்கள் இப்பெயர் பெறுகின்றன. Refer: A Manual of Zoology, Part II, Page: 196] இனத்தைச் சேர்ந்தவை சதுசதுப்பான சேற்றுப்பகுதியில் துளை போன்று கூடுகளை யமைக்கின்றன. இக்கூடுகள் கரையோரப்புற்கள் கோரைகளால் சூழப்பட்டிருக்கும். இவ்வினத்திலும் ஆண் மீன்களே கூடுகளைத் தோண்டவும், முட்டைகளைப் பேணவும் பொறுப்பாக உள. அத்தோடு வாற்பகுதியால் நீரில் சுழற்றிச்சுழற்றி அடித்துச் சுற்றியுள்ள நீரைக் காற்றேட்டமுள்ளதாக்கி, முட்டைகளுக்கு வேண்டிய உயிரகத்தை (Oxygen) நிரப்புகின்றன.

விற்றுடுப்பு மீன்களில் (Bowfin Fishes) ஆண்கள் சதுப்பு நிலப்பரப்பில் வட்டமான கூடுகளை யமைக்கின்றன. ஆண்மீன்கள் இவ்வாறு கூடுகளைக் கட்டியவுடன் ஓர் அல்லது பல பெண்மீன்கள் அவ்வாண்மீனுடன் உறைந்து "ஊழியம்" செய்கின்றன. அம் மீன்கள் பின் முட்டையிட்டு மீள்கின்றன. இம் முட்டைகள் ஆண் மீன்களால் 'அடை' காக்கப்படுகின்றன. முட்டைகளினின்றும் வெளி வரும் குஞ்சுகளும் தம் 'தந்தை'யரால் விழிப்போடு காக்கப்பெறுகின்றன. கூட்டாக அக்குஞ்சுகளை யிட்டுச்சென்று அவற்றைச் சுற்றி நீந்திவந்து உலவச் செய்கின்றன.

மும்முள் முதுகுடை (Three spined stickle back) மீன்கள் இனத்தில் கூட்டை யமைக்கும் முழுப்பொறுப்பும் ஆண்களுடைய தாகும். நீரோட்டம் மெதுவாகவும் சீராகவும் உள்ள பகுதியில், நீர்ச் செடிகளின் தண்டுகளாலும், வேர்த்துண்டுகளாலும் தம் கூட்டைக் கட்ட முற்படுகின்றன. உடலில் சுரக்கும் பசைப்பொருளாலான இழைகளால் அத்துண்டுகளைச் சேர்த்துக் கூட்டைக்கட்டி முடித்தபின் இவ்வாண்மீன்கள், தக்க இணையைநாடி யலைகின்றன. தக்க இணையைத் தேர்ந்து நன்முறையில் இணைந்து வாழ்ந்து, இறுதியில் தம் கூட்

டிற்குக்கூட்டி வருகின்றன. அங்கு அவ்விணையைச் சுற்றிச் சுற்றி வந்து முட்டையிடச் செய்கின்றன. மறுநாள் வேறோரிணையை நாடி முன்போலவிலந்து அவ்விணையையும் முட்டையிடச் செய்யும். இவ் வாண்மீன்கள் இவ்வாறு போதிய அளவு முட்டைகளைச் சேர்த்தபின் ஏறத்தாழ ஒரு திங்கள் அவற்றைக் காக்கின்றன. ஒவ்வோராண் மீனும் இவ்வாறு தத்தம் கூட்டைப் பிற உயிரிகள் அண்டவியலாது அவற்றைத் தாக்கி விரட்டித் தம் கூட்டைக் காப்பதோடு, அவ்வக் கால் கூட்டிற்கு நிகழும் சிதைவுகளைப் பழுதுபார்த்துச் சரிசெய்கின் றன. இக் கூடுகளுக்கு இரு வழிகளை யமைத்திருத்தலால் சீரான நீரோட்ட மியல்வதாகி முட்டைகளுக்கு வேண்டிய உயிரகம் ஒழுங் காகக் கிட்டுகிறது. குஞ்சுகள் முட்டைகளினின்றும் வெளிப்பட்ட பின் ஆண்மீன்கள் மேலும் விழிப்போடு அவற்றைக் காக்கின்றன. கூட்டின் மேற்பகுதியை யகற்றிக் கூட்டைத் தம் குஞ்சுகளுக்கேற்ற தொட்டிலாக்கிக் காக்கும் இவ்வினத்தின் ஆண்மீனின் பொறுப் புணர்ச்சி வியப்புத் தருவதாகும்.

பெரும்பாலான புதிர்மீன்கள் (Labyrinthic Fishes) மிகப் புதி ரான முறையில் தம் கூடுகளை யமைக்கின்றன. இவ்வினத்தின் ஆண் மீன்கள் ஒருவகைக் காற்றுக்குமிழிகளிடுகின்றன. அக்காற்றுக் குமிழிகளை யொட்டியவாறு மிதக்கும் ஏராளமான நுரைகளே கூடு களா யமைகின்றன. இந் நுரைக்கூடுகள் (Foamy nests) கோள வடிவிலிருக்கும்.

சிலவகை மீன்களிடும் முட்டைகள் பளுவாகவிருக்கு மாதலால், அம்முட்டைகள் நீரில் அமிழ்ந்து விடும். அவ்வேளையில். இதற்காக நீரின் அடிமட்டத்தில் காத்துக் கொண்டிருக்கும் ஆண்மீன்கள் அம் முட்டைகளை வாயில் ஏந்தியவாறு நீந்துகின்றன. இவ்வாண்மீன்கள் பல முட்டைகளை ஒரு வகைச் சளியால் இணைத்து அவற்றைக் காக் கின்றன. முட்டைகளிட்ட பெண்மீன்கள் தாமிட்ட முட்டைகளையே தின்ன முயல்வதும், ஆண்மீன்கள் விழிப்பாயிருந்து அம் முட்டை களைக் காப்பதும் இவ்வின மீன்களிடையே நிகழும் விந்தையாகும். முட்டையினின்றும் பின்னர் வெளிப்படும் குஞ்சுகள் நாம் முன்னர்க் குறிப்பிட்ட நுரைக்கூடுகளில் சிறிதுகாலம் உறைகின்றன.

பிற்றர்லிங் (Bitterling) என்ற மீன்கள் தம் பிறங்கடைகளைப் பேணுவதில் மிக்க அக்கறையும், கவலையும் காட்டுகின்றன. இவ்

www.thamizham.net - Free E book No 7425

வினத்தின் பெண்மீன்கள் தம் கருக் குழாயுடனிணைந்த (Oviduct பெருங் குழலொன்றை யுருவாக்குகின்றன. இக் குழல்கள் மூலம், பிற உயிரிகளினின்றும் தம் முட்டைகளைக் காப்பதற் கேதுவாகத் தாம் வாழுமிடங்களில் கிடக்கும் சிப்பிகளில் முட்டைகளை யிடுகின்றன. இச்சிப்பிகளில் முட்டைகள் பொறிக்கப்பட்டுக் குஞ்சுகள் வெளிப்படுகின்றன. பின் அவை தமது 'விருந்தகத்தி'னின்றும் தப்பிச் செல்கின்றன.

'சிசிலிடு' (Cheilids) எனுமினத்தவை தம் முட்டைகளை வாயில் ஏந்தியவாறே அலையும். இங்குப் பெண்மீனே இக்கடமையை யாற்றுவது குறிப்பிடத் தக்கதாகும்.

வெண்ணெய் மீன்கள் (Butter fish) எனப்படுபவை தம் முட்டைகளை மொத்தமாகத் தம்மோடே இட்டுச் செல்லுகின்றன. இவ்வினத்தின் முட்டைகள் தம் பெற்றோரிருவராலுமே காக்கப்படுவது நோக்கத் தக்கதாகும்.

கடற் குதிரை (Sea-horses Hippocampus) இனமீன்களில், ஆண்மீன்களின் வாலின் அடியில் முட்டைத் தொகுதிகளை அடைகாப்பதற்கான 'பை' யொன்று உள்ளது. இப் பைகளில் (Brood pouches) முட்டைகள் அடைகாக்கப் பெறுகின்றன. இவ் வடைகாக்கும் பருவத்தில் இந்தப் பைகள் அரத்தத்தால் பயனடையும் வகையில் நுண்ணிய அரத்தக் குழாய்கள் இப்பகுதியில் திறக்கின்றன. மேலும் பையும் உறுதிப்படுத்தப் படுகிறது. பின்னர் இப் பைகளில் நிறைக்கப்பெறும் முட்டைகளும், கருக்களும் (Embryos) இவ்வரத்தக்குழாய்கள் மூலம் உணவு பெறுகின்றன.

ஆண்மீன்களின் உடலில் ஏற்படும் இம்மாறுதல்களைப்போன்றே பெண்மீன்களிலும் சில மாறுதல்கள் நிகழ்கின்றன. இவற்றின் பயனுகப், பெண்மீன்களின் இறுவாய் (Cloaca) முட்டைத் திரள்களை ஆண்மீன்களின் வாலின் அடியிற் காணப்படும் பைகளில் இடுவதற் கேற்ப மாறுதலடைகிறது. மேலும் அடைகாப்பதற்கான பைகளின் வாயும் வெளியிடப்பெறும் குஞ்சுகள் மீண்டும் உட்புக வியலாதவாறு சிறிதாக அமைந்துளது.

சிலவகை ஆழ்கடல் மீன்களில் ஒருவகையான பாலடிப்படையிலான உருவ வேறுபாடு காணப்படுகிறது. (Sexual Dimorphism) ஆண்மீன்கள் பெண்மீன்களைவிட உருவிற் சிறியவையாயுள. ஆண்

www.thamizham.net - Free E book No 7425

மீன்கள் பெண்மீன்களின் உடலில் எப்பொழுதும் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. தூண்டில் மீன்கள் (Angler fishes) இவ்வினத்தைச் சார்ந்தவை"

முடிவுரை:

மீன்களின் வாழ்க்கையில் இவைபோன்ற எண்ணற்ற சுவையான கூறுகள் காணப்படுகின்றன. நுணுகி ஆராயுங்கால் இயற்கையின் ஒவ்வோரணுவும் நமக்குச் சுவையான பல செய்திகளைக் கொண்டுள்ளது என்பதற்கு "மீன்களின் தாய்மை யுணர்வு" ஒரு சிறந்த சான்றாகும். 0

மொழிப்பேரறிஞர். தேவநேயப் பாவாணரின்
திருக்குறள் தமிழ் மரபுரை
விலை உரு. 15-00
கிடைக்குமிடம்- திரு. தே.மணி,
ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

பாவலர் பெருஞ்சித்திரனாரின்
அரிய தமிழ் நூல்கள்.

			உரு.	காசு.
1.	பாவியக்கொத்து	விலை	2 —	50
2.	எண்சுவை எண்பது	,,	1 —	50
3.	புரட்சிப்பாவலர் பாரதிதாசன்	,,	0 —	50
	பதிவஞ்சற் செலவு		1 —	50

கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தென்மொழி, கடலூர்-1.
தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	9 உருபா.	10-50 உருபா	13 உருபா.
அரையாண்டுக் கட்டணம்	5 உருபா.	6 உருபா.	7 உருபா.
தனி இதழ்:	75 காசு	90 காசு.	1 உருபா.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7425

பார்ப்பனப் பாம்பு!

-நச்சினார்க்கினியன்.

காலம் மாறினால் கழுதைகள் மாறுமா?
பருவம் மாறினால் பன்றிபுல் மேயுமா?
நச்சுப் பாம்பிற்கு நன்றியுண் டாகுமா?
பார்ப்பனப் பாம்பு பாயுது! சீறுது?
பாரடா தமிழா! பாரடா! பார்!பார்!
பெரியார் அதன்பல் பிடுங்கிய பின்னும்
அண்ணா மகுடியால் அடக்கிய பின்னரும்
கலைஞர்தம் விரலைக் காட்டிய பிறகும்
பார்ப்பனப் பாம்பு பாயுது! சீறுது!
பாரடா தமிழா! பாரடா! பார்! பார்!
'தினமணிக் கதிரெ'னும் புற்றினி லிருந்து
உனையுயிர் குடிக்க ஓங்குது படத்தை!
சேக்சு பியரின் செய்யுளைப் பார்த்து
ஆக்கிய நாடகத் தமைந்த பாடலாம்
தமிழ்த்தாய் வாழ்த்து! அதைத் தாமிவர் கொண்டால்
தெலுங்குத் தாயும் கலிங்கத் தாயும்
மராட்டியத் தாயும் மற்றபல் தாய்களும்
தோன்றித் தோன்றித் தொல்லை கொடுப்பராம்!
தாய்தொறும் ஒவ்வொரு தந்தையும் தோன்றிக்
கொடியெடுப் போராய்க் குடிகெடுப் பாராம்!
கொடிகேட்டுக் கலைஞர் கூறிய தற்கு
மடிதற்று வந்த மாற்றான் யார்? பார்?
முடிகேட்டுக் கலைஞர் முழங்கிட வில்லை!
மூவண் ணக்கொடி கோபுரங் கொண்ட
அடிமைக் கொடிக்கே அத்தனைக் கொதிப்பு!
இதனுடன் மற்றோர் எரிச்சலும் பாராய்!
சுந்தர னாரின் செந்தமிழ்ப் பாட்டை
எந்த முறையில் இழிவு படுத்திட
முந்துது பார்! பார்! மூதறி ஞர்குழு
இப்போ தாகிலும் இனம்புரிந் தாயோ?
மறைமலை அடிகள் தமிழ்த்தாய் பற்றியும்
உறுதமிழ்ப் பெயரை ஒருசில ஊர்க்கே
அமைத்தது பற்றியும் அலுவ லகங்களில்
மாட்டும் படங்களை மறுத்தது பற்றியும்
ஆர்த்த பொழுதே அவர்தலை மூடிப்
போர்த்த போர்வையைப் பாதி விலக்கினர்!
பல்கலைக் கழகத்துப் பயிற்சிமொழி யாக
வல்ல தமிழ்மொழி வரத்தலைப் பட்டதும்
மீதிப் போர்வையில் பாதியை விலக்கினர்!
ஓது தனிக்கொடி மீது கொதித்தவர்
முற்றும் திறந்த முனிவோ ராயினர்!
எற்றே இனிமேல் நின்செயல்? எழு! விழி!
பார்ப்பனப் பாம்பின் படத்திலே தமிழ்த்தடி
ஓச்சடா! ஓச்சடா ஒருமுடி வுடனே!

www.thamizham.net - Free E book No 7425

மாமை

-புலவர். திருமேனி. நாகராசன்

மாமை என்பது நிறமாம். அது மகளிர்க்கே உரியது. என்னை, 1 'மாஅயோள்' எனும் சொல்லாட்சி உண்டல்லது பிறிதின்மையான் அறிக. இதனை 'இலாவணியம்' என்பர் வடநூலார். மாமை பெண்ணிற்குப் பேரழகு பயந்து நிற்கும். அது 2 'மாமைக் கவின்' எனச் சிறப்பிக்கப்படுமாறு அறிக. 3 கறவை இடத்துத் தீம்பால் இருக்குமாறு போலக் கன்னி இடத்து மாமை இருக்கும் என்றறிக.

மாமையின் நிறம் யாதெனில் மாந்தளிர் நிறமாகும். என்னை, 4 "நறுவடிப், பைங்கான் மாஅத் தந்தளி ரன்ன, நன்மா மேனி" எனுந் தொடரான் அறிக. ஈண்டு, மாமேனி என்றது மாமை நிறத்தையாம். மாமை நிறத்தை மாந்தளிர் நிறத்தொடு ஒப்ப வைத்து எண்ணிய. மைக்கு வேறு சில காட்டும் காட்டுவாம். அவை வருமாறு காண்க:- 5 "மாந்தளிரே மாமேனி" எனவும், 6 "மாந்தளிர்போல் மின்னிய மாமேனி விளர்ப்பதென்னே" எனவும் வருமாற்றுல் அறிக. இனி மாமையை 7 ஆம்பலின் நாருரித்த மெல்லிய தண்டு நிறத்திற்கும்; 8 அசோகந்தளிர் நிறத்திற்கும்; 9 வேனிற் காலத்தில் மலரும் பாதிரியின் நிறத்திற்கும் உவமை யாக்குவது புலவரை இறந்த புலவர் பெருமக்கள் துணிபுமாகும்.

இனி இத்துணைச் சிறப்புடையதான மாமை. மகளிர்க்கு இருப்பது தவப்பயனே ஆம். மாமை மகளிர்க்கு மலருக்கு மணம் போல

1. குறுந்தொகை; செய்யுள் எண், 9; அடி. 1-
2. குறுந்தொகை; செய்யுள் எண்: 27; அடி 5-
3. குறுந்தொகை; செய்யுள் எண்: 27;
4. குறுந்தொகை; செய்யுள் எண்: 331
5. சீவகசிந்தாமணி; எண்: 652
6. தஞ்சைவாணன் கோவை; பாட்டு எண்: 22
7. "நீர்வாஎர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால் நாருரித் தன்ன மாந்தனின் மாமை" (நற்றிணை; பாட்டு எண்: 6; அடி 1-2)
8. "தளிரேய்க்கு மெழினலம்" (கலித்தொகை; பாட்டு எண்: 15; அடி 12)
9. "வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன மயிரேர் பொழுகிய வங்கலுழ் மாமை" (குறுந்தொகை; செய்யுள் எண்: 147)

www.thamizham.net - Free E book No 7425

வும், மண்பதைக்கு மன்னவன் போலும் சிறப்பினும் என்க. கன்னியின் மாமையால் கரையில் பயன் காண்பவன் அவள் தன் தலைவனே. அவன் தன் தலைவியின் மாமைக் கவினை நோக்கிநோக்கிப் பேரின்பம் உறுவான். இதோ, ஒரு தலைவி கூற்றிலேயே இதனை அறிக. [10] "துறைவற் கினிய மன்றவென் மாமைக் கவினே" எண்டுக் குறுந்தொகைத் தலைவியும் அழகாகச் சொல்வதைக் காண்பாம். [11] "நல்ல ஆவின் இனியபால் கன்றினாலும் உண்ணப்படாமல், கறக்கும் ஏனத்திலும் கொள்ளப்படாமல் தரையில் சிந்தி வீணானதுபோல என் மாமையாகிய பேரழகு எனக்கு அழகு பயந்து நிற்காமலும், என் தலைவனுக்கும் காட்சி இன்பம் பயவாமலும் பசலையானது தான் உண்ண விரும்பும்" என்பாள். கன்றும் உண்ணாது என்னும் உவமையால் தலைவியின் மாமை தலைவற்கே பயன்பட இருப்பதை விளக்கிற்று என்க.

தலைவன் உடனிருக்கத் தலைவியிடத்துக் கொழித்து நிற்கும் மாமை அவன் அவளை விட்டுப் பிரியின் உடன் அழிந்து படுமாம். மாமை புணர்ச்சிக்கண் சிறந்து அகற்சிக்கண் அழிதல் அறிக. இஃதே அதன் பண்பு. அதோ, பாண்டியன் உலா வருகின்றான்; காண்கின்றாள் காரிகை; கண்டு பேசுமாறு கேட்க:- [12] "களியானைத் தென்னவனை இளையன் என்று இகழ்ந்த பணியாத பகைவர் யாவரும் தம் நாட்டை இழந்தார்; அது பணியாமையின் பரிசு. நானோ உலாவந்த மன்னவனின் அழகிய மார்பினைக் கையெடுத்துத் தொழுதேன்; தொழவும் மாந்தளிர் போன்ற என் நிறத்தையும் இழக்கப் பெற்றேன்; இது முறையோ?" எண்டுத் தலைவி பாண்டியன் பிரிவினால் மாமை இழக்கப் பெற்றமை அறிக. பின்னும் ஒரு தலைவி [13] "வலிமையும் திண்மையும் கொண்ட நெடுந்தோளும், வீறும் மிகுந்த வேலும் உடைய தலைவன் தனைக்கண்டு மாமை நிறத்தை இழந்த என்னை......" எனப் பேசுதலாலும் பிரிவினால் மாமை அழிதல் உறுதியாயிற்றென்க. இன்னும் ஒன்று [14] "நீதான் குவளை மலர் போன்ற மையுண்ட கண்களையுடைய தலைவியைக் கைவிட்டு முயற்சியை மேற்கொண்டு வினையிடத்துச் செல்வாயாயின், இண்டியின் நெடிய கரிய அழகிய தளிரின் மீது

10. ஐங்குறுநூறு; செய்யுளெண்: 146
11. குறுந்தொகை; செய்யுளெண்: 27
12. முத்தொள்ளாயிரம்; பாட்டெண்: 26
13. புறப்பொருள் வெண்பாமாலை; வெண்பா எண்: 307
14. நற்றிணை; பாட்டெண்: 205

www.thamizham.net - Free E book No 7425

மழை பெய்து விட்ட பொழுது உண்டான அழகிய நிறம் போன்ற இவளது மாமையினழகு இன்றோடு போய்விடும்" என்னும் தோழி உரையானும் உணர்க.

இனி அம்மாமை தலைவன் பிரிவால் மட்டும் அல்லாது பசலையாலும் அழியும் என்க. பசலை என்பது தலைவன் பிரிவால் தலைவிக்கு உண்டாகும் வேறுபாடான பொன் நிறமாகும். பசலை தலைவன் பிரிந்த வழியே தலைவிக்கு உண்டாகுதலின் முன்னர், தலைவன் பிரிவினுல் மாமை அழியுமாறு காட்டிப் பின்னர், பிரிந்தவழி உண்டாகும் பசலையால் மாமை அழியுமாறு காட்டப்படுவதாயிற்று. 15 தலைவி, தலைவன் பிரிவினுல் தன்னிடம் உண்டான பசலையானது அவனது மாமை நிறத்தை உண்ண விரும்பி நிற்கும் என்பாள். 16 ஒருத்தி "நல்ல மலைநாடனுகிய தலைவன் என்னை விட்டுப் பிரியவும் மணிமிடைந்த பொன் போலும் என் மாமை நிறம்சாய அழகிய நலத்தைப் பசலை அழிக்கும்" என்பாள் 17 "இனிப்பசந் தன்றென் மாமைக் கவினே" என்பதாலும், 18 "நன்மா மேனி பசப்ப" என்பதாலும் 19 "மாமை பொன்னிறம் பசப்ப" என்பதாலும் மாமை பசலையால் அழிக்கப்படுதல் உறுதியாதல் காண்க.

இனி, பிரிந்த தலைவன் தலைவியை வந்தணைந்த போது பசலை அழியும்; பழைய மாமை வந்துறும் என்க. பிரிவின்கண் தொலைத்த மாமையைத் தலைவன் கூட்டப் பெறுங்கால் தலைவி மீட்டும் பெற்றுக் கொள்வாள் என்பது மரபாம். மாமையின் மாயந்தான் என்னே!

---

15. குறுந்தொகை; செய்யுளெண்: 27
16. நற்றிணை; பாட்டெண்: 304
17. ஐங்குறுநூறு; பாட்டெண்: 35
18. ஐங்குறுநூறு; பாட்டெண்: 144
19. புறப்பொருள் வெண்பாமாலை; வெண்பா எண்: 299

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு	வெளிநாடு	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	5-50	4-00
தனியிதழ்	0-25	0-45	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

www.thamizham.net - Free E book No 7425

இருபதாம் நூற்றாண்டின் "அறநெறி"

-மணிவேலன்.

1. இருபதாம் நூற்றாண்டின் "அறநெறி"யை உங்கட்கே
எடுத்துச் சொல்வேன்:
சிரிக்காதீர்! புனைமாட்டைப் போல்தலையை ஆட்டாதீர்!
தெளிந்து பாரீர்!
"ஒருக்காலும் உண்மையினைப் பேசாதீர்! உண்மையைப்
உரத்துப் பேசித் [போல்
திரித்திடுங்கள் பொய்க்கயிற்றை! குமுகாயம் அதற்குத்தான்
செவியைச் சாய்க்கும்!

2. ஒழுக்கமாய் நடவாதீர்! 'அப்பாவி' என்ற பெயர்
உம்மைச் சேரும்!
அழுக்குற்ற உடல்மீது வெள்ளுடையை மாட்டுதல்போல்
ஆளை ஏய்க்க
ஒழுக்கமுடன் நடப்பதுபோல் நடியுங்கள்! கற்பினையே
உடைப்பில் போட்டுப்
புழுத்திருக்கும் குமுகாய மேடையிலே கற்புடையாள்
போல்நடிப்பீர்!

3. ஏட்டினிலும் மேடையிலும் திருக்குறளின் கருத்துரையை
எடுத்தெடுத்துக்
காட்டுவதே தொழிலாகக் கொள்ளுங்கள்! கண்டிப்பாய்க்
கடைப்பிடித்துக்
கேட்டைநீர் விலைகொடுத்து வாங்காதீர்! உம்வீட்டில்
கிடக்கும் பெட்டிப்
பூட்டைமட்டும் திறவாதீர்! நன்கொடைக்கு மடியேந்திப்
புறப்படுங்கள்!

4. தொண்டுதொண்டு என்றுபல பேசுங்கள்;
துரும்பைக் கூட
அண்டையிலே நகர்த்தாதீர்! உடைசிறிதும் அலுங்காமல்
அயலானுக்குத்
தொண்டைவற்ற அறிவுரையை வண்டிவண்டியாய்நீங்கள்
சொல்லல் வேண்டும்!
மண்டையிலே இருக்கிறதோ இல்லையோ....குடியன்போல்
மதர்ப்பு வேண்டும்!

www.thamizham.net - Free E book No 7425

5\. இலக்கியத்தில் ஆழ்ந்தாழ்ந்து படியாதீர்! தமிழ்மொழியின்
இலக்கணத்தை
அலசிப்பல் ஆய்வுகளைச் செய்யாதீர்! இலக்கியத்தின்
ஆயிரம்பேர்
தலைகீழாய் மனப்பாடம் செய்வதுடன் அங்குமிங்கும்
தாறுமாறாய்ச்
சிலவரிகள் தெரிந்தாலே போதுமையா! மேடையாட்சி
செலுத்துமையா!

6\. அரசியலில் ஏதேனும் ஒருகட்சி உறுப்பினராய்
ஆகிவிட்டால்
இரவுபகல் படியாமல் உலகிலுள்ள அறிவெல்லாம்
இமைக்கும்போதில்
ஒருசேர மண்டையிலே வந்துவிடும்! இறுமாந்தே
உலவிக் கல்விக்
கரைகண்ட அறிஞர்களைக் கண்ணெடுத்தும் பாராதீர்!
கழித்துத் தீர்ப்பீர்!

7\. "ஏழைகளே! உம்வாழ்வை உயர்த்துவதே எம் வாழ்வு!
எமது கட்சித்
தோழர்களாய்ச் சேருங்கள்! கட்டணத்தை வழங்கிடுவீர்!"
எனவே சொல்லித்
தோழர்களின் சில்லறையைப் பெருந்தொகையாய்த் தொடுத்
துன்பமின்றி [தெடுத்துத்
வாழையிலை நெய்வடிய உண்டுண்டே உடல்பருக்க
வாழக் கற்பீர்!

8\. வண்ணானின் கூன்கழுதை முதுகின்மேல் அழுக்குமூட்டை
வாய்த்ததைப்போல்
கண்ணீரில் மூழ்கிவந்த காசுகளில் ஊர்தியொன்று
கணக்காய் வாங்கி
அண்ணாந்து பார்த்தபடி வலம்வருவீர்! தொண்டர்கள்
அகம்மலர்ந்து
உண்ணாக்குப் புண்படவே "வாழ்க!" வெனக் கத்திடுவர்;
உயர்வீர் நீவிர்!

www.thamizham.net - Free E book No 7425

தனிமப் பட்டியல்

இல. க. இரத்தினவேல்.
(பூதவியல் விளக்குநர், பெரியார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.)

கற்காலக் கருவிகளைக் கையாண்டு சலித்த பண்டை மாந்தன், தன் வாழ்க்கைக்குத் துணை செய்யும் தொழில்களுக்கு ஏந்தான கருவிகளை எண்ணத் தலைப்பட்டான். அறிவியல் வளர்ச்சியின் முதற்பெரும் முன்னேற்றமாகத் தீக்கண்டவதைக் கண்டவன், மாழைகளையும், அவற்றின் மழமழப்பையும் உறுதித் தன்மையையும் கண்டு தன் கருவிகளை அவற்றால் அமைக்கத் தொடங்கினான். நூற்றாண்டுகள் பல கழிந்தன. தான் கண்ட பொருட்களுள் சில ஒப்புமைகளை அறிந்த மாந்தன் அவற்றை வகைப்படுத்தினான். பளபளப்பும் உறுதியு மிக்கனவாயிருந்த மாழைகளைப் பொன்மங்கள் (Metals) எனவும் மாழைகளல்லாதனவற்றை அன்மங்கள் (Non metals) எனவும் பகுத்தான். இவ்வாறு தொடங்கிய பகுப்பு பற்பல மாற்றங்களையடைந்து இன்று நாம் காணும் தனிமப் பட்டியலாக மலர்ந்தது. வேதியலருக்கும் (Chemists) பூதவியலருக்கும் (Physicists) மிகவும் இன்றியமையாத இத் தனிமப்பட்டியலின் வளர்ச்சியை மிகச் சுருங்கக் காண்போம்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

9. நான்சொல்லும் "அறவுரை"யைக் கேளாமல் நீங்களெல்லாம்
'நன்மை'–'தீமை' [லாம்
'தான்' என்னும் மதர்ப்பென்ன...பலவாறாய் ஆராய்ந்து
"தகுந்த வற்றைத்
தேனீப்போல் தெரிந்தெடுப்போம்!" என்பீரேல் குமுகாயம்
சீசீ யென்றே
ஏனென்று கேட்பதற்கும் ஆளின்றித் தள்ளிவிடும்!
எச்ச ரிக்கை!

10. "பண்பாடு! பண்பாடு! காப்பதே கடமை!", யெனப்
பற்றி வாழ்ந்த
பண்பாளர் இன்றுள்ள நிலையறிவீர்: 'பறைய'னென்றும்
'பள்ள'னென்றும்
மண்ணுலகின் புதுமையிலா 'தொதுவ'ரென்றும் 'காட'
மயங்கிச் சாகும் [ரென்றும்
உண்மையினை அறியீரோ? ஓகோகோ! அழுதுகொண்டே
ஒப்புக் கொள்வீர்!

www.thamizham.net - Free E book No 7425

பொருட்கள் அனைத்தும் மேலும் 'பகுக்க முடியாத' நுண்ணிய அணுக்களால் ஆனவை எனத் தொடங்கும் சான் டால்டனின் (John Dalton) அணுக்கொள்கை, மூலகங்களை வகைப்படுத்தும் எண்ணக் கிளர்ச்சியைத் தோற்றுவித்தது. மூலகமாவது வேதியல் முறைகளால் மேலும் பகுக்க முடியாத தனிமப் பொருளாகும். எல்லா மூலகங்களும் ஏன் ஓர் அடிப்படை மூலகத்தின் பெருக்கங்களாக இருக்கலாகாது என எண்ணிய பிரவுத்து (Prout), திருவள்ளுவருக் குப்பின் 1846-இல் எல்லா மூலங்களின் அணு நிறையும் நீரக (Hydrogen) அணு நிறையின் பெருக்கங்களாகவே உள்ளனவென் றும், எல்லா மூலகங்களும் அடிப்படை மூலகமான நீரகத்தாலேயே அமைந்துள்ளன வென்றும் கூறினர். இவர் தம் கொள்கை அடிப் படையிலேயே தவறுடைத்த தெனினும் இவர் முன்மொழிந்த அணு வின் தன்மை இன்றும் பாராட்டற்பாலதாகவே உள்ளது.

மூலகங்களை வகைப்படுத்தும் முதல் முயற்சி தி. பி. 1848-இல் தோபிரீனர், என்பவரால் தொடங்கப் பெற்றது. மூலகங்களின் அணு நிறைகளையும் குணங்களையும் ஆராய்ந்த தோபிரீனர் வேதியற் பண்புகளுள் ஒன்றுடனென்று தொடர்புற்ற மூரின மூலங்களின் அணுநிறை ஏறத்தாழச் சமமாகவோ, அன்றி ஒன்றின் நிறை ஏனைய இரண்டின் நடுமதிப்புக்குச் சமமாகவோ இருப்பதைக் கண்டார். இரும்பு (அணுநிறை 56), ஒளிர்மம் (Covalt-அ. நி. 59) பூசியம் (Nickel-அ. நி. 59) போன்று அணுநிறை ஏறத்தாழச் சமமாகவும், பாசதை (Chlorine-அ. நி. 35) தீநாறம் (Bromine-அ. நி. 80), கறையம் (Iodine-அ. நி. 127) ஆகியவற்றுள் பாசதை, கறையம் ஆகியவற்றின் அணுநிறை நடுமதிப்பான 81, அவற்றுக்கிடைப் பட்ட தீநாறத்தின் அணு நிறைக்கு ஏறத்தாழச் சமமாகவும் இருப் பதை அறிவித்தார்.

பின் தி. பி. 1893-இல் தீயதை (Oxygen)யின் அணுநிறையை அடிப்படையாகக் கொண்டு தி சாண்காற்ருய் (De Chancourtois) மூலகங்களை வகைப்படுத்திய அட்டவணை, முதல் காலமுறைப் பட்டி யல் (Periodic Table) எனக் கூறத்தக்கதாம். எனினும் இற்றைக் காலமுறைப் பட்டியலின் வடிவத்தை நமக்களித்தவர் நியூலாந்து (Newlands) என்று கூறினுல் அது மிகையாகாது. தம் காலத்தில் தெரிந்திருந்த 56 மூலங்களைக் கூடும் அணுநிறைப்படி வரிசைப்படுத் திய நியூலாந்து ஏழிசை வரிசைக்கும் தம் அணுநிறை வரிசைக்கும்

www.thamizham.net - Free E book No 7425

ஒற்றுமையிருப்பதைக் கண்டார். ஏழிசையின் இசைப்பயனில் சொக்கிய நியூலாந்து ஏழிசையில் எங்ஙனம் எட்டாவது சுரம் ,முதற் சுரத்தின் இருமடங்காகி, இங்ஙனமே மறுபடியும் மாறி மாறி வருகிறதோ அங்ஙனமே கூடும்அணு நிறைப்படி வரிசைப் படுத்தப்பட்ட மூலகங்களுள் எந்தவொரு மூலகத்தினின்றும் எட்டாவது அமையும் மூலகம் முதலாவதன் ஒத்த இயல்புகளையே கொண்டுள்ளது எனக் கட்டுரைத்து ஏழியற்படுத்திய தம் அட்டவணையை வெளியிட்டார். நியூலாந்தின் கூற்று முதலில் எள்ளி நகையாடப் பட்டதேனும் தி. பி. 1918-இல் அதன் அடிப்படைச் சிறப்புகளுக்காகத் தேவி பதக்கப் பரிசு (Devy Medal Award) அளிக்கப்பட்டு அவர் சிறப்பிக்கப் பெற்றார்.

தனிமப்பட்டியலின் இறுதி வடிவம் தி. பி. 1900-இல் திமித்திரி மண்டலீ (Dimitri Mandaleef) என்னும் உருசிய வேதியலறிஞரும், உலோத்தர் மெய்யர் (Lother Meyer) என்னும் அமெரிக்கப் பூதவியலறிஞரும் தனித்தனியே ஆராய்ந்து அமைத்ததாகும். மண்டலீ தம் காலமுறை நெறி யீட்டின் (Periodic law)படி வகைப்படுத்தியதனால் இப்பட்டியல் காலமுறைப் பட்டியல் (Periodic Table) என வழங்கப் படுகிறது. காலமுறை நெறியீடாவது:

மூலகங் கள்தம் கூட்டுப் பொருட்கள்
ஏலும் குணங்கள் இவற்றின் அணுநிறைக்
காலமுறை யாலெனக் கணித்தார் மண்டலீ.

இதன் பொருளாவது: பருவ மாற்றங்களைப் போலும் கிழமை மாற்றங்களைப் போலும் மூலகங்களின் அணுநிறை மிகமிக அவைதம் குணவியல்புகள் ஓரமைத்தான வரையறைக்குள் மாறுபட்டு, குறிப்பிட்ட இடைவெளிக்குப்பின் திரும்பவும் அதே குணவியல்புகள் கொண்டனவாயுள்ளன. இந்நெறியீடு நியூலாந்துதம் கோட்பாட்டின் திருந்திய வடிவமேயாகும். மண்டலீ வேதியற் குணப்படி நிரற்படுத்தித் தம் பட்டியலை அமைத்தார். உலோத்தர் மெய்யரோ, மூலகங்களின் அணுப்பருமம், உறைநிலை, கொதிநிலை, வளைதிறன் போன்ற இன்னோரன்ன பூதவியற் குண மாறுபாடுகளை, அவற்றின் அணுநிறைக்கு ஒப்புமைப்படுத்தித் தம் பட்டியலை உருவாக்கினார் இவ்வாறு, தமக்குள் எவ்விதச் சார்புமின்றித் தனித்தனியே கண்ட மண்டலீயின் அட்டவணையும், மெய்யரின் அட்டவணையும் வியக்கத்தக்க அளவில் ஒன்றோடொன்று இயைந்திருந்தன.

www.thamizham.net - Free E book No 7425

மண்டலீ தம் ஆய்வமைப்பில் மெய்யரினும் மிக விரைந்து முன்னேறினார். தம் காலமுறைப் பட்டியல் விளக்கங்களை உலகுக்கு உரைத்தார். மண்டலீயின் தனிமப்பகுப்பு அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதை, வேதியற் கூர்தலற வளர்ச்சியின் புரட்சியான புத்தூழியின் மெய்ம்மை மலர்ச்சியெனக் கூறலாம்.

மண்டலீயின் மூலக நிரற்படுத்தலில் மூலகப் பண்புகளின் கால முறை தெளிவாகப் புலப்பட்டது. இந் நிரற்படுத்தல் அவ்வம் மூலகங்களின் இயைதிறனோடு (Valency) ஒத்திருந்தது. மூலகப் பண்புகள் அணுநிறை மடங்கால் தீர்மானிக்கப்பட்டன பட்டியலில் மூலகங்களின் இருக்கையைக் கொண்டு அவற்றின் அணுநிறைகளைத் துல்லியமாகக் கணக்கிட முடிந்தது. ஏறத்தாழச் சமமான அணுநிறைகளையுடைய தனிமங்களும் (எடுத்துக் காட்டு: திண்மியம், மூனையம், வெண்பொன்) முறையாக உயரும் அணுநிறைகளையுடைய தனிமங்களும் (எ-டு: மென்பொன், உவர்மம், வெடிமம்) ஒத்த வேதியற் குணங்களைக் கொண்டிருந்தன. இயற்கையன்னையின் மடியில் எங்கும் பரந்து கிடந்த தனிமங்கள் யாவும் அணுநிறை குறைந்தனவாயிருந்தன.

மண்டலீ தம் வேதியற்றிறனின் வியக்கத்தக்க கூறு யாதெனில், தமது பட்டியலில் காலியாக இருந்த இடங்களுள், அற்றைநாள் வரை கண்டுபிடிக்கப்படாத மூலகங்களை-இன்னின்ன மூலகங்கள் இன்னின்ன இடத்தில் இருக்க வேண்டுமென்றும், அவற்றின் பண்புகள் இத்தன்மைத் தனவென்றும் மிகத் துணிவாக விரித்தெழுதியமையே யாம். பின்னுள், அவ்வம் மூலகங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின், மண்டலீ தம் பேரறிவுக் கூற்றின் மெய்ம்மையைக் காணக்காண வேதியலர் கழிபேருவகை யடைந்தனர். மண்டலீ உன்னிப்பாகக் கூறிய கூற்றுக்கும் பிற்றைநாள், வேதியலர் கண்டவற்றுக்கும் உள்ள ஒற்றுமையை அடுத்த பக்கத்தில்காண்மின்.

திருமண அன்பளிப்பு

கருக்கம்பாளையம் திரு. க க. ஆறுமுகம் அவர்களுக்கும் திருவாட்டி பழநியம்மாள் அம்மையாருக்கும் மடங்கல் உக-ஆம் பக்கல் (6-9-70) திருமணம் நிகழ்ந்தது. அதையொட்டி மணமக்கள் 'தென்மொழி' வளர்ச்சிக்காக உரு 15-00 அளித்தனர். தொகை நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. அவர்கள் எல்லா நலமும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம். அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7425

தி. பி. 1902-இல் மண்டலீயின் உன்னிப்பு.	மூலப் பண்புகள்	தி. பி. 1917-இல் விங்கலேரின் கண்டுபிடிப்பு.
கடினியப்போலி (Ekasilicon)	பெயர்	செருமானியம்
72	அணுநிறை	72.32
5.5	ஒப்படர்த்தி	5.47
13 க. செ.	அணுப்பருமம்	13.22 க. செ.
அழுக்கடைந்த பழுப்பு	நிறம்	பழுப்பு வெண்மை
0.073	வெப்ப எண்	0 076
வெண்மை (கடினியப் போலியிரு தீயதை)	காற்றில் சூடாக்கினால்	வெண்மை (செருமானிய இரு தீயதை)
அரிது	அமிலச் சேர்க்கை	நீரகப் பாசதையில்
கனியப் போலியிரு தீயதையுடன் உவர்மம்	பெறும் முறை	செருமானிய பிசுதீயதையுடன் கரியம்
மீவெப்பத்தாங்கி ஒப்படர்த்தி 4.7 மூலக்கூற்றுப் பருமம் 22 க. செ.	இரு தீயதை	மீ வெப்பத்தாங்கி, ஒப்படர்த்தி 4 703 மூலக்கூற்றுப் பருமம் 22.16 க. செ.
கொதிநிலை 100°செ ஒ. அ: 1.9 மூ. கூ. பருமம் 113 க. செ.	நாற்பாசதை	கொதிநிலை 86° செ. ஒ. அ, 1.887 மூ. கூ: பருமம் 113.25 செ.
கொதிநிலை 160° செ. ஒ. அ: 9.96	நால் இருகரியஐநீரக (C_2H_5)ப்பிறங்கடை (Tetra-ethyl derivative)	கொதிநிலை 166° செ ஒ. அ. <. 1 (ஒன்றுக்கும் கீழ்

குறிப்பு: கண்டுபிடிக்கப்படாத ஒரு மூலகத்துக்குத் தற்காலிகப் பெயராக, அதன் சார்பான, அதைப்போன்ற மூலகத்தின் பெயரை அடைவு கொடுக்கும் பெயரீட்டு முறையில் கடினியப் போலி (Eka Silicon) எனக் கொடுக்கப்பட்டது.

www.thamizham.net - Free E book No 7425

இங்ஙனம் எண்ணற்கரியவாறு, வேதியலில் நுண்மாணுழைபுல மிக்க மண்டலீ, அணுநிறைப்படி நிரற்படுத்திய பட்டியலே தெளிவான தனிமப்பட்டியலாக விளங்கிற்று. இலியம்-வெடியம், மண்ணியம்-கறையம், ஒளிர்மம்-பூசியம், ஆகிய மூலக இணைகளில் இந்நிறை வரிசையும் பிழைத்தமையான், மோசிலீ (Moseley)யின் அணுவெண் கொள்கைப்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ள தனிமப்பட்டியலே இற்றை நாளில் நாம் பயன்படுத்தும் பட்டியலாயிற்று. அணுவெண்ணுவது மூலக அணுவொன்றிலுள்ள சுழல் மின்னி (Planetary electrons)களின் எண்ணிக்கையாம். இவ்வணுவெண் முறை மூலகங்களின் அணு மின்னமைப்பையும் பிறவற்றையும் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. அணுவெண்ணின்படி நிரற்படுத்திய முறையின் சிறப்பும் பயனும் விரிக்கிற் பொத்தகமாகப் பெருகும்; எனவே அதன் விளக்கம் விடப்பட்டது.

கூடும் அணுவெண் வரிசைப்படி நிரற்படுத்திய பட்டியல் அமைப்பு முறைகளுள்ளும், பலவகையானவை உள்ளன. மூலகங்கள் யாவும் அணுவெண் கூடுதற்படி நேர் வரிசையிலும், ஒத்த இயல்புடையன ஒரே கலத்திலும் அமையுமாறு வரையப்பட்ட தனிம அட்டவணையுள் நேர்வரிசை காலம் (Period) எனவும் கலவரிசை இனம் (Group) எனவும் அழைக்கப்பெறும். இவ்வகையான அட்டவணையில் ஏழு காலங்களும் தொண்டு [ஒன்பான்] இனங்களும் உள்ளன. முதலாம் இனம் முதல் ஏழாம் இனம்வரை ஒவ்வொன்றும் அ, ஆ என இரு உட்பிரிவுகளுடையனவாகப் பகுக்கப் பட்டன. மண்டலீக்குப்பின் கண்டறிந்த எதனோடும் இணையாத அரிய வளிமங் [Rare gas]களை ஒரினப்படுத்தி, இன்ம இனம் எனப் பெயர் நிறீஇ, எட்டாவது இனத்துக்கும் முதல் இனத்துக்கும் இடையில், அஃதாவது மின்னேர் காரங்களுக்கும் மின்னெதிர் நான்மங்களுக்கும் [Four halogens] இடையில் இருத்தினர்.

எனினும் இந்த அமைப்பு முறை முதல் எந்த அமைப்பு முறையும் இலக்கணியமானதாகவும் எளிதானதாகவும் இருக்கவில்லை. மேனுளிற் பெரிதும் பயன்படுத்தப்பட்ட "போரின் அமைப்பு" எனப் படும் நீட்டப்பட்டியலே [Long form] எளிய முறையில், ஒரளவு நிறைந்த விளக்கத்தைக் கொடுக்க வல்லது. இந் நீட்டப்பட்டியல் அமைப்பு முறையில், கூடும் அணுவெண்ணின்படி முதலாவது இனம் முதல் ஒவ்வோரினத்தின் முதல் உட்பிரிவு [அகரப்பிரிவு] மூலகங்களை மட்டும் வரிசைப்படுத்தி, ஏழாம் இன முதல் உட்பிரிவுக்குப்பின் எட்டாம் இனத்தை யிருத்தி, மறுபடி முதலாவது இனம் முதல் ஒவ்வோரினத்தின் இரண்டாம் உட்பிரிவு [ஆகாரப் பிரிவு] மூலகங்களை வரிசைப்படுத்தி ஏழாம் இன. இரண்டாம் உட்பிரிவுக்குப்பின் அன்ம இனத்தை யிருத்தி ஒரு வருசையாக நிரற்படுத்தப் பட்டுள்ளது. ஈண்டுக் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் நீட்டப் பட்டியலே யாம்.

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7425

தொழுநோய்

பர். இரத்தினவேல் சுப்பிரமணியம் B. Sc; M. D.
M. R. C. P. (London)
(முதல்வர் சென்னை மருத்துவக் கல்லூரி.)

தொழுநோய் என்பது ஒரு தொற்று நோய். இஃது ஒருவகை நச்சுயிரியினுல் ஏற்படுவது. இந்த நச்சுயிரியை 1873-இல் மருத்துவர் ஆன்சன் (Hanson) என்பவர் கண்டுபிடித்தார். என்புருக்கி நோயை உண்டாக்கும் நச்சுயிரியும், தொழுநோயை உண்டாக்கும் நச்சுயிரியும் பார்ப்பதற்கு ஒன்றுபோலவே இருக்கும். இந்த இரண்டு நச்சுயிரிகளும் ஒருவகையான சாயத்தை ஏற்றுக்கொள்ளும். அப்படி ஏற்றுக்கொண்ட பிறகு மற்ற நச்சுயிரிகள் எல்லாம் ஒருவகைக் காரநீரை ஊற்றினுல், அவை சாயத்தை விட்டுவிடும். இந்த இரண்டு வகை நச்சுயிரிகள் மட்டும் அவ்வாறு விடுவதில்லை. ஆதலால் இவற்றைக் காரநீரையும் எதிர்க்கும் பூச்சிகள் என்று வழங்குகின்ருர்கள். அந்த நச்சுயிரி, பொதுவாக தோலினடியிலேயே தங்குகின்றது. வெளிப் பகுதிகளில் உள்ள நரம்புகளையும் தாக்குகின்றது. ஆனுல் மூளையிலேயோ அல்லது அதனின்று வரக்கூடிய முதுகுத் தண்டையோ தாக்குவது கிடையாது. இத் தொழுநோய் சில நாடுகளில் மிகையாகவோ சில நாடுகளில் குறைவாகவோ அல்லது இல்லாமலேயோ இருக்கின்றது. எந்தெந்த நாடுகளில் இக் கொடு நோயைத் தடுப்பதற்குச் சிறப்புமிக்க பொறுப்பினை மேற்கொண்டிருக்கின்ருர்களோ அந்த நாடுகளில் இந்நோய் இல்லாமலேயே இருக்கின்றது என்பதுதான் காரணியமாகும். இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் பலஆண்டுகட்கு முன்பு. இந் நோய் கண்டவர்களைக்கொடுமையாக நடத்தினுர்களாம். இவர்களைத் தனித்து இருக்கும்படியாகச் செய்து இவர்களுக்கு இரண்டு மரக்கட்டைகள் கொடுத்தார்கள். அவற்றைக்கொண்டு இவர்கள் ஒலியெழுப்புதல் வேண்டும். கடைகள் அல்லது சிறப்பான மக்கட்கூட்டம் இருக்கக்கூடிய இடங்கட்கு இவர்கள் வந்தால், அக் கட்டைகளினுல் ஒலியெழுப்புதல் வேண்டும். அப்படிச் செய்வதால் மற்றவர்கள். தொழுநோயினர் வந்திருக்கின்றனர் என்று அறிந்து அவர்கட்கு வேண்டியவற்றை எடுத்து ஒரு பக்கம் வைத்துவிட்டு விலகிவிடுவார்கள். அவ்வாறு நோயில்லாதவர்கள் விலகிய பிறகு இவர்கள் தங்கட்கு வேண்டியவற்றை எடுத்துக் கொள்ளுவார்கள். தொழுநோய் விடுதிகட்கு இவர்கள் மறுபடி

www.thamizham.net - Free E book No 7425

யும் செல்லல் வேண்டும். தொழுநோய் என்று கண்டவுடனேயே மதக் குரவர்கள் இவர்களின் தலையில் சிறிது மண்ணைப்போடுவர். அஃதாவது உலகம் இவர்களை இறந்தவர்களாகக் கருதவேண்டு மென்பதே இதனுடைய பொருளாகும். பிறகு மாந்தன் இறந்துவிட்டால் என்னென்ன சடங்குகள் செய்வார்களோ அந்தச் சடங்குகளை யெல்லாம் உயிரோடு இருக்கும்போதே செய்து முடித்துவிடுவார்கள். இவ்வாறு இவர்கள் கடுமையாகத் தொழுநோய் உள்ளவர்களைப் பிற மக்களோடு கலக்காமல் செய்ததின் காரணியமாக, இந்த நாளிலே இங்கிலாந்து நாட்டில் தொழுநோய் கிடையாது. இந்நோய் இவர்கள் செய்த குற்றத்தினால் ஏற்படுவதில்லை. இளம் பிள்ளையாயிருக்கையில் தெரியாத்தனத்தால் நோய் உள்ளவர்களோடு பழகியதன் விளைவாகவே வந்தது. ஆகவே இவர்களைத் தீண்டத் தகாதவர்களைப்போன்று நடத்துவது சரியன்று. இப்போது, இவர்களைப் பிற நோயுள்ளவர்களை நடத்துவதைப் போலவே நடத்தி, குணப்படுத்தி மற்றவர்கட்கும் நோய் ஏற்படக்கூடாத வகையில் செய்யக்கூடிய வழிகள் இருக்கின்றன.

இப்போது ஓர் ஊரில் 100 தொழு நோயினர் இருக்கின்றார்கள் என்றால், அதில் 5-இல் இருந்து 10 பேருக்குத்தாம் தொற்றக்கூடிய தொழுநோய் காணப்படுகின்றது. இதை உலெப்பரோ மேட்சு தொழு நோய் (Leopromatos Leprosy) என்று சொல்கிறார்கள். பொருள் என்னவெனில், தொழுநோய் நச்சுயிரி இவர்களுடைய தோலில் காணப்படுகின்றது. அதன் காரணியமாக இவர்களுடன் பழகுகின்றவர்கட்கு இந்த நோய் ஏற்படக்கூடும் என்பதாகும். அதிலும், சிறப்பாக, சிறிய குழந்தைகள் இவர்களுடன் நெருங்கிப் பழகுவதினால் அவர்கட்கு நோய் வரலாம். எவ்வளவுக் கெவ்வளவு அகவை குறைவாக இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு எளிதாக நோய் ஏற்படும். அதிலும் சிறப்பாக 5 அகவையிலிருந்து 10 அல்லது 15 அகவைக்குட் பட்டவர்களுக்கு இந்நோய் எளிதாகப் பரவும். அப்படிப் பரவுவதற்குப் பழக்கம் நெருக்கமாகவும், நாள்படவும் இருத்தல் வேண்டும். ஒருநாள் இரண்டுநாள் பழக்கம் போதாது. மாதக் கணக்காகப் பழகுதல் வேண்டும். அதிலும் துணி இல்லாமல் உடலோடு உடல்படக்கூடிய சூழ்நிலை வந்தால் நோய் எளிதாகப்பரவும். நம் நாட்டில் வெய்யில் மிகையாக இருப்பதினால் மக்கள் கூடியவரை எவ்வளவு குறைந்த அளவு உடை உடுத்த முடியுமோ அவ்வளவு குறை

www.thamizham.net - Free E book No 7425

வாகத்தான் உடுத்துகிருர்கள். இதிலும் ஆண்கள், மேலாடையோ சட்டையோ இல்லாமல் இருப்பதுஇயல்பு. இப்படி இருப்பவர்களுக்குத் தொற்றக்கூடிய தொழுநோய் இருந்து, அவாகளுடைய குழந்தை களை எடுத்துப் பழகுவதினுல் குழந்தைகட்கு நோய் எளிதாகப் பரவு கிறது. அதிலும் குழந்தைகட்கு ஊட்டம் இல்லாத உணவு கொடுத்து வந்தார்களேயானுல் நோய் எளிதாகப் பரவும்.

நான் முன்பே சொன்னது போல் தொற்றக்கூடிய நோயை 'உலெப்ரோ மேட்சு தொழு நோய்' என்றும், தொற்ருமல் நரம்பில் தொழுநோய் நச்சுயிரி இருக்கும் நோயைத் தொற்ருத வகைத் தொழு நோய் அல்லது "நியூரல் தொழுநோய்" என்றும் கூறப்படும். இந்த 'நியூரல் தொழுநோய், மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின் றது. முதலாவது படைபோல் காணப்படும். இதில் ஆங்காங்குத் திட்டையாகப் படை காணப்படும். இப்படை மற்ற தோலோடுகலந்து கொள்ளக்கூடிய அளவில் ஒரே தட்டையாக இருக்கும். ஆனுல் எளி தாகப் பிரிந்து காணப்படுகின்றது. இவர்களிடமிருந்து நோய் பர வாது. ஆனுலும் தொழுநோய் என்ற பெயர் இருப்பதினுலும், தொழு நோயினரைக் கண்டாலே மக்கட்கு ஓர் அச்சம் இருப்பதினுலும், இவர் களைப் பொதுமக்கள் வேலைக்கு வைத்துக்கொள்வதில்லை. இவர் களோடு நெருங்கிப் பழகுவதும் கிடையாது. இவர்களுக்கு இருக்கும் படையில் உணர்ச்சி குறைவாக இருக்கும். அதிலும் சிறப்பாகச்சூடும் குளிர்ச்சியும் தெரியாது. அடுத்தாற்போல் தொடும் உணர்ச்சியும் தெரியாது. வெளிப்பகுதிகளிலுள்ள நரம்புகளும் தடித்திருக்கும். இந்த நோய் மிகும்போது படையும் மிகும். காலிலே புண் ஏற்பட லாம். படையிலே வியர்வை இருக்காது. படையிலே மயிர்களும் இரா.

அடுத்தாற்போல் "நியூரல் டியூபர் குலாயி" (Tuber Culaid) என் னும் ஒருவகையான தொழுநோய் காணப்படும். இதில் படை தட்டை யாக இல்லாமல். "கழிவகப்படை" (கக்கூசுப்படை) என்று சொல் லக்கூடிய வகையில் படையின் ஓரம் சிறிது உயரமாகக் காணப்படும் மிக உயரமாகக் காணப்பட்டால், அது "வளர்நிலை டியூபர் குலாயி" என்றுசொல்லப்பெறும். மேலேசொன்ன அறிகுறிகள், இவ்வகையான படையில் அடியிலே போகும் நரம்புகள் தடித்துக் காணப்பெறும் அடுத்தாற்போல், படையில்லாமல் நரம்பைமட்டும் தாக்கக்கூடிய ஒருவகையான தொழுநோய் இருக்கின்றது. இது மற்ற நோய்களி னுல் வெளி நரம்புக்கு ஏற்படக்கூடிய நோயைப்போல் காணப்பட

www.thamizham.net - Free E book No 7425

லாம். ஆதலால் இவ்வகையான தொழுநோய்க்கு "பாலி நியூரிடிக் வகை" (Polynueritic Type) என்று சொல்லப்படும். இதில் படை கிடையாது. ஆனால் நரம்பைமட்டும் தாக்குவதனால் காலோ கையோ தொங்கிப் போய்விடலாம். அதனால் இவற்றைப் "பாலி நியூரிடிக் வகை" என்று சொல்லுவார்கள்.

இன்னும் ஒருவகையான தொழுநோய் உண்டு. இதை ",இண்டர் மீடியேட்வகை" என்று சொல்லுகிறார்கள். அஃதாவது, இவ்வகையான தொழுநோயில் படைகள் திட்டுத்திட்டாக மென்பூம்பட்டில் செய்தது போல் மென்மையாகக் காணப்படும். இதில் சில வேளைகளில் நச்சுயிரியும் இருக்கலாம். ஆனால் சிறப்பாக இவ்வகை நோய் உடல் வலிவு வற்றவர்களிடமே மிகையாகக் காணப்படுகின்றது. ஆதலால் உடலில் வலிவு ஏற்பட்டவுடன் தானவே நோய் கண்டிக்கப்படுகிறது. தொழுநோய் மருத்துவத்தில் நற்சான்றிதழ் பெற விரும்புகின்றவர்கள் இவ்வகையான நோயுள்ளவர்கட்கு மருத்துவம் செய்தால் நல்ல புகழ் பெறமுடியும். ஏனென்றால், தானகவே இந்நோய் போய்விடும். அப்படியிருக்கும்போது ஏதோ மருந்தொன்று கொடுப்பதன் வழி விரைவாக இந்த நோய் போய்விடலாம். இதனால் மருத்துவருக்குச் சிறந்த பெயரும் புகழும் ஏற்படக்கூடும்.

நோய் பரவுவதற்கு மூன்று அடிப்படை வழிகளாவன:- (1) தொற்றக்கூடிய வகையாகத் தொழுநோய் இருத்தல் வேண்டும். (2) அதுமட்டும் இருந்தால் போதாது. அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அவர்களோடு சிறு குழந்தைகள் பழகல் வேண்டும். சிறு குழந்தைகள் மட்டும் இருந்தால் போதாது. (3) இச் சிறுகுழந்தைகள் தொற்றக்கூடிய நோய் உள்ளவர்களோடு நெருங்கிப் பழகல் வேண்டும். ஒரு நாள் இரண்டு நாட்கள் அல்ல. மாதக் கணக்கில் அல்லது ஆண்டுக் கணக்கில் பழகல் வேண்டும். ஆதலால் நோய் பரவாதிருக்க. தொற்றக்கூடிய தொழுநோய் உள்ளவர்களிடமிருந்தே குழந்தைகளைப் பழகவிடாமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும். அவர்களையும் பழகாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளல்வேண்டும். அவர்களைச் சிறப்பாக எந்தெந்த வேலைகளில் குழந்தைகளோடு நெருங்கிப் பழகும்படியான வாய்ப்புஏற்படுமோ அத்தகைய ஆசிரியர் அலுவல், மருத்துவச் செவிலிப்பெண் அலுவல்களுக்கு அவர்களைச் சேர்த்தல் கூடாது. தொற்றக்கூடிய நோயுள்ளவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால், குழந்தை பிறந்தவுடனேயே குழந்தையையும் தாயையும்

www.thamizham.net - Free E book No 7425

பிரித்து வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். தாய்க்குத் தொற்றுநோய் இருந்தால், குழந்தையைப் பிரித்துவிட்டால் அக்குழந்தைக்கு இக் கொடிய நோய் வராது.

தொற்றக்கூடிய நோயுள்ளவர்களுக்குக் கண்ணிலே நோய்கண்டு கண் தெரியாமற்போகலாம். பேசுவதற்கு ஏதுவாகவுள்ள 'Pharnyx, அல்லது "ஒலிப்பெட்டி" என்று சொல்லக்கூடியதில் நோய்ஏற்பட்டுத் தொண்டை கட்டிப் போவதால் அவர்கள் பேசுவது என்னவென்று புரியாமல் போய்விடுகின்றது. மற்றும் இந்நோயினால் நெறிகட்டிப் பல பகுதிகளில் காணப்படலாம். மிக அரிதாக நுரையீரல்களிலே இந் நச்சுயிரி தங்கலாம்.

மருத்துவம்:— நோய் பரவாமல் இருப்பதற்கு ஏற்பாடுசெய்தல் மிக்க இன்றியமையாதது. சிறப்பாகத் தொற்றக்கூடிய நோயுள்ளவர்களைக் கவனமுடன் மருத்துவம் செய்துகொள்ள ஏற்பாடு செய்தல் வேண்டும். அப்படிச் செய்து நோயைக் கண்டித்தால் நோய் பரவாது அவர்களுக்குப் பண்டுவம் (சிகிச்சை) செய்வதோடு அல்லாமல் 18 அகவைக் குட்பட்ட சிறுவர்களை இவர்களோடு பழகாமல் தடுப்பதிலேயே இந்நோய் பரவாது. இவர்கள் பயன்படுத்தக் கூடிய பொருள்களையும் தனியே வைத்திருந்து, வீட்டிலே உள்ளவர்கள் அப் பொருள்களைப் பயன்படுத்தாமல் இருந்தால் அதுவும் நோய் பரவாமல் இருப்பதற்குத் துணையாக இருக்கும்.

நோயுள்ளவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டும். அதாவது, நோயைக் கண்டிக்க முடியுமென்றும், நோய் கண்டதினாலே அச்சப் படத் தேவையில்லை யென்றும் ஆறுதல் சொல்லவேண்டும். தொற்றக் கூடிய நோயுள்ளவர்கட்குச் "சல்போன்சை" வாயின் வழியாகவோ, அல்லது ஊசியின் வழியாகவோ செலுத்தலாம். வாயின் வழியே கொடுப்பதென்றால் மாத்திரையாகக் கொடுக்கலாம். தொடக்கத்தில் நாள்ஒன்றுக்கு 10பகாயிரம் சீரெடை M.G அளவில் கொடுக்கவேண்டும் மூன்று நாட்கள் கொடுத்த பிறகு கெடுதல் ஒன்றும் காணப்படவில்லை யென்றால் ஒருநாள் விட்டு மறுநாள் 10பகாயிரம் சீரெடை (M.G)மேனி மிகைப் படுத்தி நாள் ஒன்றுக்கு 100பகாயிரம் சீரெடை(M.G)வரையில் கொடுக்கலாம். இப்படி நாள் ஒன்றுக்கு 100 பகாயிரம் சீரெடை அளவு கொடுக்கும் காலம் தொடங்கிய பிறகு ஒரு கிழமைக்கு ஒருமுறை குருதித் தேர்வு செய்தல் வேண்டும். குருதியில் சிவப்பு அணுக்கள் குறையலாம். ஆகவே இவ்வ் குறையாமல் இருப்பதற்கு, இந்த மருந்

www.thamizham.net - Free E book No 7425

தைக் கொடுக்கும் பொழுது "வைட்டமின்-பி காம்ப்ளெக்சும்" இரும்புச் சத்தும் சேர்த்துக் கொடுப்பது தேவை. சிற்றூர்களில் மக்கள் அன்றாடம் அல்லது ஒன்றுவிட்டு ஒருநாள் வந்து மருந்து சாப்பிடுவது தொல்லையாக இருப்பதினால் இவர்களுக்கு இந்த "சல்போன்சு" மருந்தையே ஊசியாகக் கொடுக்கின்றார்கள்! இப்படி ஊசியாகப் போட்டால் ஒரு மாதத்திற்கு ஒருமுறை போட்டால் போதும்.

இந்த "சல்போன்சு" மருந்தைக் கொடுப்பதோடல்லாமல் நம் நாட்டிலே தொன்றுதொட்டுக் கையாண்டு வந்த மரவட்டை நெய்யையும் ஊசி மூலமாக உட்செலுத்தலாம். அப்படி உட்செலுத்துவதனால் நோயை விரைவாகக் கண்டிக்க முடியும். அதுவல்லாமல் ஈளை நோய்க்குப் பயன்படுத்தும் மருந்துகளாகிய "உசுடெரப்டோமைசன்", I. N. H, Pas, Semicarbozone" ஆகிய இந்த மருந்துகளையும் பயன்படுத்தலாம்.

இப்போது தொழு நோயைக் கண்டிப்பதற்குப் பலவகையான மருந்துகள் ஏற்பட்டிருக்கின்றன. நோய் கண்டவுடனேயே பண்டுவத்தைத் தொடங்கினால், நோய் கண்டதா இல்லையா என்றில்லாமல் போக்கடிக்கக் கூடிய அளவில் பயன் இருக்கின்றது. நோயை வளர்த்துக்கொண்ட பிறகு, பண்டுவத்தைத் தொடங்கினால் நோயைக் கண்டிப்பது கடினமாக இருக்கும். இதனால் நோய் கண்ட ஒவ்வொருவருக்கும் விரல்கள் இல்லாமற்போய்ப் புண் ஏற்படவேண்டிய தேவையுமில்லை. இதைத் தமிழிலே "தொழுநோய்" என்று சொல்லுகிறார்கள். தொழுநோய் என்று உறுப்புகள் குறைந்துபோகின்ற காரணியத்தால் சொல்லுகின்றார்கள். அப்படி உறுப்புகள் குறையவேண்டிய தேவையில்லை. இந்த நோயைப்பற்றிப் பலவகையான தப்பெண்ணங்கள் மக்களிடையே இருந்து வருகின்றன காரணியம் அறியாமையே. எல்லாவகையான தொற்றுநோய் போன்று இதுவும் ஒரு தொற்று நோயே. இந்த நோயுற்றவர்களை மற்ற தொற்றுநோயுள்ளவர்களை எவ்வாறு அருள் நெஞ்சத்துடன் நடத்துகின்றோமோ அதேபோன்று நடத்துதல் வேண்டும். அவர்கள் நம்மைப் போன்று மாந்தர்கள் என்று நினைத்தல் வேண்டும். அவர்களை விலங்குகளைவிடத் தாழ்வாக நடத்துவது தவறு.

மேற் சொன்னபடி நோயுள்ளவர்களை, நன்றாய்க் கவனித்து, நோயுள்ளவர்களோடுகுழந்தைகளைப் பழகவிடாமல் காத்து, அவர்களை

www.thamizham.net - Free E book No 7425

அன்போடு நடத்திஞல் 10 அல்லது மிஞ்சிப்போஞல் 15-ஆண்டுகளுக்குள் தொழுநோய் என்னும்படியான நோய் இல்லாமல் போகும்படி செய்யமுடியும். இதற்கு மருத்துவர்கள் அல்லாமல் பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும்:

(சென்னை மருத்துவக் கல்லூரி 1969-ஆம் ஆண்டுப் பொங்கல் மலரிலிருந்து கட்டுரையாசிரியரின் இசைவுடன் தூய தமிழாக்கப் பெற்று வெளியிடப் பெறுகின்றது. தூய்தமிழாக்கம்: "செம்பியன்")

தென்மொழி அன்பர்கள் திருமணம்.

நாரா ா. மகிழ்நன்- குமுதம்

மாருத தனித்தமிழ்த் தொண்டரும், தென்மொழியின் மெய்யன்பருமான திருவளர் நாரா-மகிழ்நன் (நித்தியானந்தன்) அவர்களுக்கும், செல்வி-குமுதத்திற்கும், நிகழும் தி. பி. உ௦௦௧-ஆம் ஆண்டு மடங்கல் (ஆவணித்) திங்கள் 21 (6—9—70)-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை, திருச்சி, திருவெறும்பூரில், உயர்திரு. மீனுட்சிசுந்தரம் க.இ; ச. இ. அவர்கள் தலைமையிலும் உயர்திரு. பெருஞ்சித்திரஞர் அவர்கள் முன்னிலையிலும் தமிழ்த்திருமணம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இது கலப்புத் திருமணமுமாகும். எண்ணம், சொல், செயல் மூன்றிலும் ஒத்த திரு. நாரா மகிழ்நன் தம்திருமணத்திலும் தமிழ் நெறியைக் கடைப்பிடித்தது மிகவும மகிழ்ந்து பாராட்டத் தக்கதும் வரவேற்கத் தக்கதுமாகும். மணமக்கள் எல்லா நலனும் பெற்று நீடுவாழ வாழ்த்துகின்ரேம்.

பெருந்தேவன்-செந்தமிழ்ச்செல்வி

நெய்வேலித் தனித்தமிழ்த் தொண்டரும், தென்மொழி அன்பருமான திருவாளர். பெருந்தேவன் அவர்களுக்கும், திருவளர். செந்தமிழ்ச்செலவிக்கும், மடங்கல் 29 (14—9—70)-ஆம் பக்கல், தஞ்சை மாவட்டம் திட்டை எனும் ஊரில் உயர்திரு. பெருஞ்சித்திரஞர் அவர்கள் தலைமையில் தமிழ்த்திருமணம் மிகவும சிறப்பாக நடைபெற்றது. இவ்வூரில் இவ்வகைத் திருமணம் நடந்தது இதுவே முதல் தடவை ஆகலின், இது இவ்வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணியது. மணமக்கள் சீரும் சிறப்புமுற்று வாழ வாழ்த்துகின்ரேம்.

—அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7425

(ம-101) விளக்கம் வேண்டும்.

ஐயா,

தென்மொழி சுவடி: 8, ஓலை: 4. படித்தோம். தமிழகம் தன்னாட்சி பெற்றுவிட வேண்டும் எனும் தங்கள் கனவுக்கு உருவம் கொடுத்து உயிர் எழுப்ப ஆயிரமாயிரம் தமிழிளைஞர்கள் அணியமாயுள்ளனர். வெற்றாரவாரங்கள் அவர்களுக்குப் பிடிக்கா. காலங்கருதி யிருக்கும் அவர்தம் நெஞ்சினுள் கனன்று கொண்டிருப்பது அத்தனையும் செயல், செயல், செயலே!

செயற்கரிய செய்த பெரியாரைப் பாடும் தங்கள் கவடற்ற-உயர்ந்த உள்ளத்தைப் பாட எமக்குத் திறனில்லை. கடவுட் கொள்கையில் இன்னும் தெளிவானவிளக்கம் தேவை. எல்லாம்வல்ல ஓர் ஆற்றல் உண்டு என்பதை யாரும் நம்பாமலிருக்க முடியாதுதான். ஆனால் சிறுசிறு தெய்வங்களின் பெயரால் காட்டும் சில வெளிப்பாடுகள் பொய்தானா? கலக்குறு கொள்கைக் கடவுள் மறுப்பு விளக்குற வேண்டும். தீய நினைவும், தந்நலப்பற்றும், கற்பனையும் இறைமையே என்றால் திருடுவதும் கொலைசெய்வதுங்கூட இறைமைதானே! பின்னர் இந்த இறைத்தன்மைகளை ஒடுக்கச் சட்டமேன்? கட்டுக்காவல்கள் தாம் ஏன்? ஒருவேளை அவையும் இறைமைதானோ? தாங்கள் அளிக்கும் சான்றுகள் மனநிறைவைத் தரவில்லை. அருள்கூர்ந்து அடுத்த இதழிலேனும் விளக்குவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

திரு. இ. மறைமலை அவர்களின் மடல் (ம. 96.) ஈ படிப்பார்க்கு நகைப்பையே விளைவிக்கும். பாவாணர்ஐயா அவர்கள் நாலரைக் கோடித் தமிழர்களுக்கும் பொதுவானவர். ஐயா அவர்களை யார் போற்றினாலும் தூற்றினாலும் அஃது எல்லாரையுமே தாக்கக் கூடியதே என்பது மட்டுமன்று; திரு இலக்குவனார் அவர்கள் நலனிலும் தமிழர்கள் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை, திரு. மறைமலை அவர்கள் மறக்க வேண்டா. மடல் 99-ஐ நாங்களும் வற்புறுத்துகிறோம். தமிழ்-வடமொழிச் சொல் தொகுப்பு இன்றியமையாததும் உடனடித் தேவையும் ஆகும். மடல்-205-இன் கடையிரு பகுதிகளை

www.thamizham.net - Free E book No 7425

மறுபடியும் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். அத்துடன் வேறென்ன சொல்வது?, வினு-விடைப் பகுதிகளையும் தொடங்க வேண்டும். அவற்றால் நாங்கள் தெளிவு பெறுவதோடு நம் கொள்கை பரவத் தோதாக விருக்கும்.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.—குறள்-648

—ப. சுப்பையா, எழும்பூர்.

(ம-102) பெரியார்க்கு வேண்டுகோள்.

மதிப்பிற்குரிய ஐயா வணக்கம். பார்ப்பனீயத்தை எதிர்த்துத் தமிழன் தன்மான உணர்வுடன் வாழவும், தமிழர் குமுகாயத்தில் சிறந்த மறுமலர்ச்சி ஏற்படுத்தவும் தொடர்ந்து பணியாற்றி வருகின்ற தலைவர் தந்தை பெரியார் அவர்கள் சென்னை கிண்டிப் பொறியியல் கல்லூரியில் தமிழ் மன்றத்தைத் துவக்கிவைத்துப் பேசிய கருத்துகளை எண்ணும் போது உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் புண்படுகின்றன. சென்னைப் பொறியியல் கல்லூரி முதல்வர்க்குக் கணிப்பான் (கம்ப்யூட்டர்) என்கின்ற இயந்திரத்தைப் பற்றி விளக்கித் தந்தை பெரியார்க்குத் தமிழிலே சொல்லவியலாத காரணத்தால், தமிழில் சொற்கள் இல்லையெனத் தந்தை பெரியார் கூறுவது அவரின் மொழி அறியாமையைக் காட்டுகிறது.

பொது அறிவிற்கான கருத்துகள் தமிழ் மொழியில் இன்மையால் தமிழ் அறிஞர்களுக்குப் பொது அறிவு சற்றுக் குறைவு எனவும், தமிழில் நெறிபாடுகட்கு, அறிவிற்கு நூல்களே இல்லையெனவும், திருமணத்தின்போது வாழ்த்துவதற்குத் தமிழில் சொற்கள் இல்லை எனவும், இதுபோன்ற பல முரண்பாடான கருத்துகளையும் தந்தை பெரியார் அவர்கள் கூறியிருப்பது கண்டிப்பதற்கு உரியதாகும். குமுகாயத்துறையில் தந்தை பெரியார் அவர்களைப் பின்பற்றி வருகின்ற எங்களுக்கு அவரது மொழிப்போக்கை எண்ணுகின்றபோது மிக்க துயரம் உண்டாகிறது. எனவே தந்தை பெரியார் அவர்கள் தங்களது பணியைக் குமுகாயத்துறையோடு நிறுத்திக்கொண்டு மொழித்துறையில் ஈடுபடாமல் இருப்பதே சிறப்புடைத்து.

-பெ. சு. அன்பரசன், மதுரை.

(ம-103) பாவாணரில்லாத பாரிசு மாநாடா?

குமுகாய மலர்ச்சி காணப் புரட்சி ஆற்றும் கொள்கைத் தலைவ! செந்தமிழில் சிந்துபாடிச் சொந்தப் பிணைப்பு ஏற்படுத்தும் சொல்லாட்சி மறவ!

www.thamizham.net - Free E book No 7425

தாங்கள் ஆற்றிவரும் தமிழ் முயற்சி கண்டு பெருமைப்படும் உள்ளங்களில் ஒருவனாக இவண் மடலை விடுக்கின்றேன். ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடையில் வெற்றிநடை போட்டுச் செல்லும் தங்கள் 'பேராண்மை' கண்டு மகிழ்ந்து அதன்வழிச் செல்லாத தமிழகம், தமிழை ஏற்க மறுக்கும் 'தனிமண்ணே'யாகும் என்றே உரைப்பேன். 'தமிழ்ச்சிட்டும்' 'தென்மொழியும்' காலந்தாழ்த்தி வந்தாலும் நின்று விடக் கூடாது; அஃது என்றும் தமிழ்உலகிற்குத் 'தமிழ்த் தொண்டு' செய்து கொண்டே இருத்தல் வேண்டும். ஆனால் தமிழகம் தமிழ்க் கட்டுப்பாடு உடைய—ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர்களை மறந்தே வருகின்றது என்றே கூறுவேன்.

பாரிசில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு எத்தனையோ அறிஞர்கள் கலந்து—தமிழ்ப் புகழ் பரப்புவார்கள் என்று எண்ணினேன். ஆனால் சென்று வந்தவர்கள் அத்தனைப் பேரும் தமிழில் கற்றறிந்த நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோர்களா என்று எண்ணினால் நமது உள்ளமே நோகின்றது. தமிழ்ப்பெரு ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் உலகத் தமிழ்க்குழுவில் இடம் பெறாதது கண்டு உள்ளம் வருந்துகின்றேன். இனிமேலாவது பாவாணரின் மொழி—உரை—பேச்சு கேட்டுப் பயன்பெறுவார்களாக!

—மா. சிவசுப்பிரமணியன், திருச்சி-17

(ம-104) பகை கொளாக் கடுஞ்சொல்...!

தமிழ் மரபும் தனித்தமிழ்ப் பற்றும் மிக்க, தென்மொழி ஆசிரியர்க்கு வணக்கம்.

ஐயா, தென்மொழியில் மக்களவைப்பகுதி முகாமையான இடம்பெறுவதை அறிந்து மிக்கமகிழ்வு. தமிழ்நாட்டுக்குச் சட்டமன்றம் போன்று தென்மொழிக்கு, 'மக்களவை' எனலாம். மக்களவைப் பகுதி உ. த. க. வைப் பற்றி அறிவதற்கும் ஏதுவாய் உளது. மூன்று உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றியும் தாங்கள் எழுதியிருந்த ஆசிரியவுரையைக் கண்ணுற்றேன்.

முன்னாள் முதல்வரினும் இந்நாள் முதல்வரை என்னென்று கூறுவது என்று கலங்கியிருக்கிறீர்கள். அதுபற்றி யானும் எண்ணினேன். ஒன்றுமட்டும் உண்மை. இந்நாள் மொழி அரசுக்கு, இனி வரும் மொழிஅரசு எப்படி அமையும் என்பதை அறிந்துரைப்பின்

www.thamizham.net - Free E book No 7425

இன்னும் நலமாகும். ஊக்குவிக்கின்ற தாக்குதலாக இருக்க வேண்டுமே தவிர, உதறிவிடுகின்ற தாக்குதலாக இருத்தல் வேண்டா. 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்' என்ற குறள் நெறிப்படி இடித்துரையாக இருப்பின் நன்ருக இருக்கும்.
—வைரி. தரளம், சாத்தப்பாடி.

(ம-105) தென்மொழிக்குத் துணை...!

நெஞ்சம் நிறைந்த ஆசிரியர் அவர்களுக்கு, "கெஞ்சுவதில்லை பிறர்பால்" என்ற விழுமிய நெஞ்சுறுதி கொண்டு இற்றை நாள்வரை எத்துணையோ இன்னல்கள், இடுக்கண்கள்-இவற்றை ஏற்று, எள்ளளவு எவ்வமும் கொள்ளாது இயன்றவரையில் தனித்தமிழ்த் தொண்டாற்றும் தங்களுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கத்தைத் தெரிவித்து வரைகிறேன். இலக்கியத்தொண்டு எனப்பிதற்றி இன்று வரும் புற்றீசல்கள் போன்ற இழிதகு ஏடுகள் செழித்து வளருங்கால் "தென்மொழி" பொருளின்றி வாடும் நிலைகண்டு உண்மைத் தமிழன் எவனும் துயர்கொள்ளாது இருக்கமாட்டான்.
—கு. பே. இளங்கண்ணன், அறி. இ.—சென்னை-10

(ம-106) அஞ்சவேண்டா....?

அன்பு சார்ந்த தென்மொழி அறிஞர் அவர்களே! தங்கள் நல் நோக்கிற்கு: அறிவுத்திறனையும் அஞ்சாத்துணிவையும் போற்றுகின்றேன்:

தங்களின் 'பொதுநலத்தை'யும் தமிழ்மக்கள் பயன்பெற வழிகோலியமையாநின்ற செயல் திறனையும் தென்மொழி இதழால் கற்று, உணர்ந்து தங்கள் அருஞ்செயலை வியந்து தலைவணங்கி வாழ்த்துகிறேன்; போற்றுகிறேன் தங்கள் அழியா அரும்பணி வாழ்க! தங்களின் இதழில் பல கருத்துகளைக் காண நேர்ந்தது. நூருசிரியம் எனும் பாக்களில்—இக்கால் வந்த ஆசிரியப்பாவில் "பெரியார் என்னும் பெயரியோரே!" என்னும் உரையிலும் தங்களின் அறிவு உரையைக் கண்டேன். தங்களின் இறைமைக் கொள்கையை அறிந்தேன். மிகவும் நன்றே! எனினும் இந்தச் சிறு விளக்கத்தால் பழைய 'புராணக்' கொள்கையை நீக்கமுடியாது....... இதையெல்லாம் தாங்கள் நன்கு அறிவீர்கள் தாங்கள்கூட அஞ்சுவதாகத் தெரிகின்றது. புராணக்காரர்களைப் போல் இல்லாததையா சொல்லப்போகிறீர்கள்? இதையெல்லாம் தாங்கள் முழுவிளக்கமாகத் தென்மொழியில் எழுதவேண்டும். இதைவிடச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் 'தமிழ்ச்சிட்டில்' நன்கு விளக்கமாக எழுதினால் கூடிய விரைவில் குமுகாயம் வளரும்.
—எழில்மணியன், சென்னை-18

www.thamizham.net - Free E book No 7425

குற்றம் கண்டவிடத்துத் தந்தை பெரியாராயினும் சரி, கலைஞர் கருணாநிதியாயினும் சரி, உள்ளத்தில் உரனும், திறனும் கொண்டு கண்டித்து வருகின்றீர்கள். இதனை அறியாத பலர் தங்கள்பால் இருந்து விலகியிருக்கின்றனர். அவர்கள் தங்கள் உள் ஆழத்தை அறியாதவர்கள் என்றுதான் எண்ணுகிறேன். அதே நேரத்தில் இன்று தமிழர்கள் ஏன் ஒற்றுமையுடன் இருக்கவேண்டும் என்பதனை மிக ஆழமாக எழுதியுள்ளீர்கள். (சுவடி: 8, ஓலை: 4.) காமராசரின் மயக்கம் தெளிய இதைவிட வேறு மருந்து தேவைப்படாது. தந்தை பெரியார் அவர்களது 92-ஆம் பிறந்த நாளுக்குச் சரியான "நூற்சிரியத்தை" நல்கியுள்ளீர்கள். அவரைப்புகழ, அவர் கொள்கைகள்பரவிடத் தங்கள் 'நூற்சிரியத்துக்கு' ஈடு, இணை வேறு ஒன்றும் இல்லை என இறுதியாகவே கூறிடலாம். தன்மானம் உள்ள தமிழர்கள், கட்டாயம் வாங்கிப் படித்திட வேண்டிய உயர்ந்த மாத இலக்கியம் 'தென்மொழி'யே என்றால் அது மிகையாகாது. பகுத்தறிவு, கடவுள்மறுப்பு, பொதுவுடைமை இவற்றைப்பற்றிப் பல கட்டுரைகள் அவ்வப்பொழுது தொடர்ந்து வெளியிடுங்கள். சூடு, சொரணையற்ற தமிழனுக்கு எப்பொழுதும் இவற்றை அழுதுகொண்டிருந்தால்தான் சிறிதாவது மானத்தைக் காக்க நினைப்பான். வாழ்க உங்கள் தமிழ்த்தொண்டு.

—து. பன்னீர்ச்செல்வன், பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம்

0 213: பெரியாருக்குப்பின் நம்மினக் காவலர் யார், என்ற எனது ஏக்கம் தங்களின் தென்மொழிச்சுவடிகள் சிலவற்றைப் பார்த்ததும் நீங்கிவிட்டது. -கொ. செ. சின்னப்பா, கொம்மக்கோவில்-ஈரோடு.

0 214: தனித்தமிழ்ச் செல்வரே, வணக்கம். தென்மொழியின் ஒவ்வோர் இதழும் சிறப்புடன் திகழுகிறது. ஆனால், சுவடி: 8, ஓலை: 4. இதழில் சிறப்பு மிக விரவியுள்ளது. மேலட்டைப் பாடல், தன்னாட்சி வேண்டுவதன் காரணியத்தைத் தெளிவாகவும், பகுத்தறிவுச்சுவையோடும் உணர்த்தித் தமிழ் நெஞ்சங்களைக் கிளர்ந்தெழச் செய்கின்றது. ஆசிரியவுரையில், "இராசாசியின் திசைமாற்றம்" என்னும் தலைப்பில் தமிழக அரசியலை அப்படியே படம்பிடித்துக் காட்டியுள்ளீர்கள். ஆரிய உள்ளம், தமிழனைக்கொண்டே தமிழனை வீழ்த்த எண்ணுகிறது. இதனைத் தன்னின நலனைப்பற்றியே கவலை கொள்ளாமல் ஆரியருக்கு அடிவருடிகளாகவுள்ள தன்னினத்தைக் காட்டிக் கொடுத்து, வெட்கப்படாமல் தானும் தமிழனெனக் கூறிக்கொள்ளும் ஆயிரமாயிரம் தமிழரும் உணர்தல் வேண்டும். இவ்விதழ் நூற்சிரியப் பாடல் மேலும் சிறப்பளிக்கிறது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. இப்பாடலைப் பலமுறை படித்து மகிழ்ந்தேன். இது போன்ற பாக்கள் மேலும் மிகுதியாக வெளிவர வேண்டுகிறேன். தங்கள் தமிழ்ப்பணி மிகவிரைவில் பயன் தருவதாகுக. —ஈ. உலகரசன், சேலம்.

0 215: ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
காவிரிவாழ் தமிழுக்கு அடியாராகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே!

இருள்களை கதிரே! சிறு நெருப்பாயிருந்து தாங்கள் எழுப்பி விட்டிருக்கும் மொழிப்பற்று உண்மைத் தமிழ்மறவர் நெஞ்சங்களிலெல்லாம் பெருந்தீயாய்க் கனன்று கொண்டுள்ளதை அறியாது புறக்கணிப்பாயிருப்போர் அதன் விளைவை எதிர்கொள்ளும் நாள் தொலைவில் இல்லை. போற்றுதலையும், தூற்றுதலையும் கருத்தில் கொள்

www.thamizham.net - Free E book No 7425

EA/3475

ளாது, 'எம்கடன் பணிசெய்து கிடப்பதே!' என்ற கொள்கையின்வழி நின்று தொண்டாற்றும் தங்கள் பெயர் தமிழ் வரலாற்றில் இன்றில்லாவிடில் நாளை-நாளையில்லாவிடில் அதற்கு மறுநாள்-கட்டாயம் ஒரு பகுதியை நிறைக்கத்தான் போகிறது. குறிப்பாகத் தாங்கள் இயற்றியுள்ள நூறுசிரியம் கழக நூல்களின் தொடர்ச்சியானதொரு இலக்கியமாக வைத்துப் போற்றப் பெறத்தக்கதென்பதைப் பல பேராசிரியர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆகவே தாங்கள் தென்மொழித் தாளிகையைக் காலந்தாழ்த்தாது வெளியிடவேண்டுகிறேன்.

—இரா. சுப்பராயலு, சென்னை-25.

0 216: அய்யா பாவலர் அவர்களுக்கு: மேழம் தென்மொழியில் மதுரைத் தியாகராசர் மொழியியற் கல்லூரி முத்தமிழ்விழாப் பாட்டரங்கத்தலைமையுரையில் தாங்கள் பாடிய பாடலைப்பார்த்தோம்; படித்தோம், பலமுறை. செந்தேனுகிய தமிழைப் பசும்பாலுடனும், முக்கனியுடனும் சேர்த்துப் பாகாக்கி எம்போன்றவர்களின் அறிவுப்பசிக்கு நல்லுணர்வாக அளித்திருந்தீர்கள். அதன் இனிமைக்கு ஈடே இல்லை; நன்றி செலுத்துகின்றோம். ஆனால், 'சந்தப்பா மட்டுமன்று; சாற்ற விரும்புகின்ற' என்ற வரியில் சந்தம் என்ற சொல் இடம் பெறுகிறது. இதில் சந்தம், வடமொழியாயிற்றே? தனித்தமிழ்ப் பாவலராகிய தாங்கள் வடமொழிச் சொல்லை எடுத்தாண்டிருப்பது நன்றன்றென்பது எம்போன்றோர் வேண்டுகோளாகும்.

—இரா. காளிமுத்தன், இரா. தேன்மொழி, தெ. உலகமுதல்வன் கோலாலம்பூர், மலேசியா.

('சந்தம்' தமிழ்ச்சொல்லே. சந்துதல்-பொருந்துதல். ஓசை பொருந்தும்படி அமைக்கும் பாவே சந்தப்பா ஆகும். —ஆ-ர்)

0 217: தமிழ்நலங்காக்க எழுந்த ஐயா, இந்நாள்வரை இந்நோக்கில் எழுந்த தாளிகைகள் யாவும் தென்மொழி தமிழ்ச்சிட்டின் கீழ்ப்பட்டதென்பதை நடுநிலையோடு ஒப்புநோக்குவோர் மறுக்கமாட்டார்கள். எழுச்சிப் பாடல்களும் அரிய கட்டுரையும் நூறுசிரியமும் தமிழனின் ஆழ்நெஞ்சினைவிட்டு அகலாத சிறப்புப் பகுதிகள். மற்றும் அன்பர்களின் ஆய்வுக் கட்டுரைகள் நற்பயனைச்சுட்டி நிற்கின்றன. தூயபணியைத் தூற்றுவோர் இலைமறை காய்களாய் என்றென்றும் இருப்பர். அவர்களை நாம் எண்ணிப் புன்முறுவல் பூத்திட வேண்டியதுதான். நல்லதோர் அரும்பணிக்கு எதிர்ப்புக் கிளம்புகிறதென்றால், நம்முடைய இக்கட்டான நிலையை வென்றோம் என்று பொருள்படுகிறதில்லையா? அறப்போரிலும் விடுதலை இயக்கத்திலும் ஊட்டம் கொடுத்துவரும் உங்களுக்கு நான் எவ்வகையில் நன்றி செலுத்தப் போகிறேன். —இ. பெருமாள், உரோசனப்பட்டி, மதுரை.

0 218; பேரன்புக்குரிய ஐயா, நம் தென்மொழி இருள் மூட்டத்தினிடையே விளக்கம் போலத் தாளிகை உலகில் இலங்குகிறது. நோண்மையும் போண்மையும் விரவி மினுக்கி வருகின்ற தாளிகைக்கு இற்றை நாளில் இருக்கின்ற மதிப்போ பனிமலைபோல் உயர்ந்து நின்றாலும், ஒருநாள் தமிழகம் விழித்திறக்கும் என்பதில் ஐயமில்லை; ஒளி அணிகள் எத்தனை நாள்தான் மின்னும்?

—புலவர். பெ. தமிழ்ப்பித்தன், போடி. மதுரை.

www.thamizham.net - Free E book No 7425